பக்கங்கள்-16 16,வைகாசி.2021 விலை-30.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182

# தினப்புயல்

PTN news

THINAPPUYAL

තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்



புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.

T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -344



## முள்ளிவாய்க்கால் விவகாரம் வடகிழக்கில் மக்களால் இராணுவதூபிகள் தகர்க்கப்படலாம்

## முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியுதீன் ஒரு பயங்கரவாதி!

## தமிழ் தேசியத்தை பாதுகாக்க வடகிழக்கு இணைப்பு அவசியம் இல்லையேல் ஆபத்து!

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# முள்ளிவாய்கால் விவகாரம் வடகிழக்கில் மக்களால் இராணுவதூபிகள் தகர்த்தப்படலாம்!

கொரோனா வைரஸ் தொடர்பாக பரபரப்பான சூழல் நிலவிக்கொண்டிருக்கும் இந்த நிலையிலே ஈழப்போரின் இறுதிக்கட்டத்திலே கொலை செய்யப்பட்ட 1 இலட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொடர்பிலே முள்ளிவாய்காலிலே அஞ்சலி நிகழ்வுகள் வருடந்தோறும் 2009 ஆம் ஆண்டுக்கு பிற்பாடு இடம்பெற்றுவருகின்றது. அவ் இடத்தில் கட்டப்பட்டுள்ள நினைவுத்தூபியினுடைய கை உடைக்கப்பட்டுள்ளது. உண்மையில் அது தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு எச்ச உணர்வை தோற்றுவித்துள்ளது. அதுமட்டுமன்றி இன்று ஆணையிறவு, முள்ளிவாய்க்காலிலே, பரந்தன் கிளிநொச்சி போன்ற இடங்களிலே இராணுவ நினைவு தூபி கட்டப்பட்டுள்ளன. அதைக்கூட தமிழ் மக்கள் இடித்தழிக்கின்ற சூழல் இந்த நாட்டிலே உருவாகப்போகின்றது. அல்லது அதனை உருவாக்கி மீண்டும் இந்த நாட்டில் ஒரு யுத்த களறியை ஏற்படுத்த விரும்புகின்றார்களா? என்ற சந்தேகம் கூட எழுப்பப்பட்டுள்ளது. அதாவது பொதுமக்களுக்கு இந்த நாட்டிலே அரசியலமைப்பு சட்டத்தினூடாக சுயாதீனமாக செயற்படக்கூடிய செயற்பாடுகள் இருக்கின்றது. அதாவது தமிழீழவிடுதலைப்புலிகள் பயங்கரவாதிகளா? அல்லது தமிழ் மக்கள் பயங்கரவாதிகளா? என்ற ஒரு கேள்வி இந்த நாட்டிலே எழுப்பப்பட்டால் உண்மையிலே தமிழ் மக்களுடன் ஒன்றிணைந்து செயற்பட்டவர்கள் தான் தமிழீழ விடுதலைப்புலிகள். அவ்வாறிருக்கின்ற பொழுது 30 வருட கால போராட்டம் அதன் பிற்பாடு சர்வதேசம் உள்ளுர் பேச்சவார்த்தைகள் என தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி தான் இந்த அரசாங்கம் ஒரு நிலைக்கு வந்தது.

ஆகவே சர்வதேச நாடுகளினுடைய ஏமாற்றத்தின் காரணமாக இந்த போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பொழுதிலும் தமிழீழவிடுதலைப்புலிகளுடன் நெருங்கிய தொடர்பினை வைத்திருந்தார் ரணசிங்க பிரேமதாச அவர்கள். அதன் பிற்பாடு இந்திய இராணுவத்துடன் ஒரு பாரிய பிரச்சனையை உருவாக்கியதன் ஊடாக தமிழீழ விடுதலைப்புலிகளை பிரித்தாளுகின்ற ஒரு தந்திரோபாயத்தையும் ஏற்படுத்தினார். இருந்தபொழுதிலும் தமிழீழ விடுதலைப்புலியினருக்கும் இராணுவத்தினருக்கும் இடையே தொடர் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வந்தது.

அந்த நிலையிலே இடைக்கால நிர்வாகம் தமிழீழ விடுதலைப்புலிகளின்வசம் இருந்தது. இதிலே நீதி நிர்வாகம் என்று அவர்கள் 58 கட்டமைப்புக்களை வைத்து இயக்கிக்கொண்டு இருந்தார்கள்.

அதுமட்டுமன்றி அவர்களுடைய படையணியிலே கடல் வான் தரை என பல்வேறு பரிணாமங்களை பெற்றிருந்தன. அதுமட்டுமன்றி வடகிழக்கு பிரதேசத்திலே கடல் எல்லையிலே யாருமே வந்து போக முடியாத அளவிற்கு பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்தது. எந்தவொருநாடும் இந்த வடகிழக்குப்பகுதிகளிலே கடல் மூலம் வரமுடியாத சூழலை தமிழீழ விடுதலைப்புலிகள் ஏற்படுத்தியிருந்தார்கள். தற்பொழுது சீனா இந்தியா பாகிஸ்தான் அமெரிக்கா போன்ற நாடுகளும் இந்த கடல் வலயத்தை சூழ இருக்கின்றார்கள். ஆகவே ஒரு விடயத்தை புரிந்து கொள்ள வேண்டும். இந்த போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு 11 ஆண்டுகளை கடந்துள்ள நிலையிலே தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி சர்வதேச நாடுகளிடம் அங்கீகாரத்தை பெற்றுவருகின்ற நிலையிலே சர்வதேசம் கூட தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு பயங்கரவாதிகள் இல்லை என்ற நிலையை தற்பொழுது கொண்டுள்ளன. பல நாடுகளிலே தமிழீழ விடுதலைப்புலிகளுக்கான அங்கீகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. அங்கு புலிக்கொடி பறக்கின்றது. அமெரிக்காவிலே உருத்திரகுமார் இருக்கின்றார் அங்கே ஏன் அவரை வைத்திருக்கின்றார்கள். இப்படி பல தமிழீழ விடுதலைப்புலிகளின் பல உறுப்பினர்கள் கனடா, சுவிஸ் மற்றும் லண்டனில் இருக்கின்றார்கள். ஆகவே வடகிழக்கில் ஏற்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளிலே எந்தவொரு இராணுவ நடவடிக்கையாவது இலங்கை அரசாங்கம் வெல்லவில்லை. சரத்பொன்சேகாவாக இருக்கலாம் சவேந்திர டி.சில்வாவாக இருக்கலாம் எத்தனையோ இராணுவ தளபதிகள் வடகிழக்கிலே தமது முழு பலத்தையும் பயன்படுத்தி போரிட்ட பொழுதிலும் அழிவுகளை சந்தித்தார்களே தவிர எந்தவொரு தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதேசங்களையும் கைப்பற்ற முடியாது போனது.

ஈழப்பபோரின் இறுதிக்கட்டத்தில் இந்தியா, அமெரிக்காவுடன் 30 நாடுகள் இணைந்து இந்த போரை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்ற முனைப்பிலே அவர்கள் கைச்சாத்திட்டு செயற்பட்டதன் ஊடாக இந்த போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இன்றும் சர்வதேச ரீதியாக தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களது பரிணாம வளர்ச்சிகளை செயற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதுவொரு புறம் இருக்க முள்ளிவாய்க்காலிலே கொலை செய்யப்பட்ட பொதுமக்களுக்காக அஞ்சலி செலுத்துவதை இந்த அரசாங்கம் தடைப்படுத்துமாக இருந்தால் இந்த நாட்டினுடைய சுதந்திரமானது இந்த



நாட்டினுடைய மனிதாபிமானமானது கேள்விக் குறியாக்கப்படுகிறது. அவ்வாறிருந்தால் மின்னல் நடவடிக்கைக்காக கிளிநொச்சியில் கட்டப்பட்ட அந்த தூபியும் இடித்தழிக்கப்பட வேண்டியது. ஆணையிறவிலே கட்டப்பட்ட தூபியும் இடித்தழிக்கப்பட வேண்டியது. கரையான் முள்ளிவாய்க்காலிலே கட்டப்பட்ட தூபியும் இடித்தழிக்கப்படவேண்டியது. அதுமட்டுமன்றி அத்துமீறிய பௌத்த ஆலயங்களும் இடித்தழிக்கப்பட வேண்டியது. இவ்வாறு எல்லாம் பல விடயங்கள் இருக்கின்றது.

ஆகவே இதுவொரு ஆத்மசாந்திக்காக மக்கள் அந்த உடல்களை தெருத்தெருவாக மக்கள் புதைத்துவிட்டு எங்கு புதைத்தார்கள் என்று தெரியாத நிலையிலே இருக்கின்ற நேரத்திலே அவர்களுக்கான ஒரு நினைவிடத்திலே சுனாமி பேரலையினால் ஆட்கொள்ளப்பபட்டவர்களுக்கு முல்லைத்தீவிலும் மட்டக்களப்பிலும், பொத்துவில் மற்றும் காலியில் நினைவுத்தூபிகள் இருக்கிறது. அவ்வாறிருக்க இந்த நினைவுதூபியை அமைப்பதற்காக மதபோதகர்களும் பொது அமைப்புக்களாலும் அந்த கருங்கல்லால் போதிக்கப்பட்ட கருங்கல்லை கொண்டுவருகின்ற பொழுது கருங்கல்லை காணவில்லை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

ஆகவே இவ்வாறான துரோக நடவடிக்கையை இந்த அரசாங்கம் செய்துவருவது வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியதொன்று. நாங்கள் தமிழ் பேசும் ஊடகம் என்ற வகையில் இதனை நாங்களும் வன்மையாக கண்டிக்கின்றோம். அரசாங்கமானது இந்த நாட்டின் ஜனாதிபதி அவர்கள் தற்பொழுது எடுக்கப்படும் சில முடிவுகள் நல்லதாக இருந்தாலும் தமிழ் மக்கள் அதாவது சிறுபான்மையினருக்கு எதிராக எடுக்கப்படும் சில முடிவுகள் பாரியதொரு சிக்கலை மீண்டுமொரு போராட்ட வடிவத்தை மாற்றியமைக்கின்ற அல்லது போராட்டங்களுக்கு இழுத்துச்செல்கின்ற வடிவங்களாக இருக்கின்றன.

முள்ளிவாய்க்காலிலே காவுகொள்ளப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்தக்கூடாது என்று கொரோனா வைரஸை காரணங்காட்டி இவர்கள் செய்கின்றார்கள் என்றால் அதற்கான வழிமுறைகளை இந்த தேர்தல் கூட கொரோனா வைரஸின் தாக்கம் இருந்த பொழுது தான் தேர்தலும் நடத்தி முடிக்கப்பட்டது. அதிலே பலபேருக்கு கொரோனா வைரஸ் தாக்கம் ஏற்பட்டிருந்தது. ஆனால் தற்போதைய காலகட்டத்திலே இந்த கொரோனாவை காரணங்காட்டி ஒவ்வொரு ஆர்ப்பாட்டங்களையும் நிறுத்துகின்றார்கள். அதுமட்டுமல்லாது ஊர்வலங்களை தடுக்கின்றார்கள். இப்பொழுது ஒரு நினைவுத்தூபி

அதாவது முள்ளிவாய்க்காலிலே ஈழப்போரின் இறுதிக்கட்டத்திலே யுத்த முனையிலே சரணடைந்தவர்கள் கூட கொத்துக்குண்டுகளுக்கும், செல்களுக்கும், துப்பாக்கி குண்டுகளுக்கும் இழக்காகி அங்கே சடலங்கள் குவிந்துகிடந்தன.

ஆகவே இவ்வாறான மனிதாபிமானமற்ற செயலிலே இந்த நாட்டினுடைய ஜனாதிபதி இறங்கக்கூடாது. தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தவில்லை இறந்த மக்களுக்காக ஆத்மசாந்தி வேண்டி மக்கள் செய்யும் வழிபாட்டை தடுக்கும் நடவடிக்கையை இந்த அரசாங்கம் கொண்டிருக்கின்றது. தமிழ் தேசிய கூட்டமைப்பினுடைய பாராளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர்கள் போன்ற பலரும் ஊடக நிறுவனத்திற்கு தமது கண்டனங்களை தெரிவித்திருந்தார்கள்.

இந்த நடவடிக்கை தவறானது அந்த இடத்திலே மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக கொரோனா வைரஸ் அதன் ஒழுங்கு முறைகளுடன் இதனை நடத்த வேண்டிய சூழலை ஏற்படுத்த வேண்டும். அப்பொழுது தான் இந்த அரசாங்கத்தில் இருக்கக்கூடிய சிறுபான்மையினர் அல்லது தமிழ் மக்களும் நம்பிக்கையை கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைகளை நகர்த்தி செல்லமுடியும் என்று கூறிக்கொள்வதுடன் இந்த அரசாங்கத்ததுடன் ஒட்டிக்கொண்டிருக்கின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், கருணாம்மான், பிள்ளையான் மற்றும் வியாழேந்திரன் போன்றவர்கள் இதனை சற்று சிந்திக்க வேண்டும். அரசாங்கத்துடன் நீங்களாவது பேசி இந்த முள்ளிவாய்க்காலிலே காவுகொள்ளப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான ஒரு நிலைமையை நீங்கள் உருவாக்கி கொடுக்க வேண்டும் என்பது ஒரு விடயமான வேண்டுகோளாக இருக்கின்றது. ஒரு தமிழர்களாக உங்களுக்கும் அந்த உரிமை இருக்கின்றது.

ஆகவே தமிழ் அரசியல் தலைமைகள், தமிழரசுக்கட்சிகள் இந்த முள்ளிவாய்க்கால் நினைவுதூபியை அமைப்பதற்கும் இடிக்கப்பட்ட நினைவுதூபியை கட்டமைப்பதற்குமான நடவடிக்கைகளை நீங்கள் செய்து மக்கள் மத்தியில் ஒரு இடத்தை பிடிப்பதற்கும் நீங்கள் நிச்சயமாக அவர்களின் ஆத்மா சாந்தியடைவதற்கும் மக்கள் மீது நல்ல எண்ணம் கொண்டவர்களாக இருந்தால் அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருக்கும் அரசியல் தலைமைகளும் அரசாங்கத்துடன் பேசி முள்ளிவாய்க்கால் நினைவு நாளை அன்றைய தினம் மேற்கொள்வதற்கு அனுமதியை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

**இரணியன்**



தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## கொரோனாவின் 3ஆம் அலையும், தினக்கூலிகளின் அவல நிலையும்

உலக நாடுகளில் மரண அச்சுறுத்தலை ஏற்படுத்திவரும் கொரோனா 3ஆம் அலையில் தற்பொழுது இலங்கையும் சிக்கி திணறி வருகின்றது. கடந்த ஏப்ரலில் புதுவருட கொண்டாட்டத்துடன் தனது கொடிய கோர உயிர் கொல்லும் கோரப்பற்களுடன் 3ஆம் அலையை ஆரம்பித்த கொரோனா வைரஸ் சுமார் 40 ஆயிரம் பேர் இவ் புதுவருடத்திற்கு பின்பு கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டும் சுமார் 200 க்கும் மேல் உயிரிழந்த நிலையில் மிகவும் ஓர் இக்கட்டான சூழ்நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது.

இம் 3ஆம் அலை கொரோனா வைரசை முறியடிக்க அரசும் சுகாதாரப் பிரிவினரும் கடுமையாக போராடிவரும் நிலையில் கொரோனா வைரசின் 1ஆம் அலையின் போது அரசு எடுத்த காத்திரமான நடவடிக்கைகளை இம் 3ஆம் அலையின் போது எடுக்கவில்லை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மனித உயிர்களுடன் அரசு விளையாடுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றனர். நாட்டை முழுமையாக முடக்கும் படி சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தல்களும் எச்சரிக்கைகளும் விடுத்தபோதிலும் அரசு எதற்கும் செவி கொடுப்பதாக இல்லை என்ற நிலையில் இருந்து கடந்த 14ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை நாடு முழுவதும் பயணத்தடை விதித்ததுடன் சகல வர்த்தக நிலையங்களையும் மூடுமாறு பணித்தது.

அத்துடன் 14ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 31ஆம் திகதி வரை மாகாணங்களுக்கிடையேயான போக்குவரத்து முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 17ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை அடையாள அட்டையின் இறுதி இலக்க நடைமுறையின்படி வெளியில் செல்லலாம் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாட்கூலி தொழிலுக்கு செல்பவர்களின் நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த மூன்று நாட்களாக வேலையின்றி மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் தமது வாழ்வாதாரத்தை கொண்டுசெல்ல வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் 17ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அடையாள அட்டை இலக்க நடை முறையின் பிரகாரம் ஒரு நபருக்கு 8 நாட்களுக்கு மட்டுமே வெளியில் சென்று கூலிவேலை பார்க்க முடியும் இவ்வாறான சூழ்நிலையில் அவர்களின் வாழ்வாதாரம் ஒட்டுமொத்தமாக பாதிக்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. அரசு இதனை கருத்தில் கொண்டு நாட்கூலி தொழிலாளர் குடும்பங்களுக்கு குறைந்தது 5000 ரூபாய் கொடுப்பனவை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தைகாக்கமுன்வரவேண்டும் என்பதுடன் இவ்வாறு செய்யத்தவறின் மிகப்பெரும் பட்டினிச்சாவை நோக்கி அவர்கள் தள்ளப்படுவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஆகவே அரசு உடனடியாக நாட்கூலி தொழிலாளிகளின் அவல நிலையை கருத்திற்கொண்டு காத்திரமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதே நாடு முழுவதும் உள்ள நாட்கூலித் தொழிலாளர்களின் வேண்டுதல்கள் ஆகும். அரசு செவி சாய்க்குமா???

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**147**

திறந்த தொடர்பு வகைகள் : போராட்டத்தின் பணிகளை விளங்கப்படுத்துவதற்காக மக்களை ஒன்று கூட்டுதலும் மக்களைக் கெரில்லாக்களது பக்கத்திற்கு இழுத்தலும்.

காயமடைந்தவர்களுக்கு உதவி செய்தல், அவர்களை மக்களிடத்தில் தங்கவைத்தல், கொல்லப்பட்டவர்களின் இறுதிக் கிரியைகளை மேற்கொள்ளல்.

எதிரி நகர்கின்ற பாதைகளிலும் வீதிகளிலும் தடையமைப்புக்களை உருவாக்குதல்.

எதிரியின் தொடர்புக் கம்பிக் கடத்திகளைச் சேதமாக்கல்.

எதிரிமீது எதிர்த்தாக்குதல் தொடுப்பதற்கும் அவனது செயற்பாடுகளைக் கடினமாக்குவதற்கும் (பதுங்கு குழிகள் போன்றவற்றை உருவாக்கல்) பின்வாங்குதலை மேற்கொள்வதற்குமாகக் கெரில்லாக்களுடன் சேர்ந்து மக்கள் ஒருமித்துச் செயற்படுவதற்காக அவர்களைத் தயார்ப்படுத்தல் போன்றனவாகும்.

கெரில்லாக் குழுக்களைப் பூரணப்படுத்துவதற்காக உதவுகின்ற மக்களுக்குரிய (அமைப்பின் ஆதரவாளர்களுக்குரிய) பாதுகாப்புக்கு உத்தரவாதமளிப்பதில் பிரதான கவனம் செலுத்தப்படுவது அவசியமாகும். நடவடிக்கைத் தந்திரோபாயத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். எதிரி மீது எதிர்த்தாக்குதல் தொடுப்பதற்குத் தயாராகும் போது, பின்வருமாறு செயற்பட வேண்டும். அதாவது, கெரில்லாக் குழுக்கள் பிரதேச மக்களின் ஒரு பகுதியினருடன் வெளியேறுகின்றதுடன், நம்பகரமான ஆட்களை அங்கே விட்டுச்செல்கின்றன. இந்த மக்கள் வெளித்தோற்றத்திற்கு சாதாரண வழமைக்கமான வேலைகளைச் செய்பவர்களைப்போல் இருந்து செயற்படுவார்கள்.

**கெரில்லாக் குழுக்களின் நடவடிக்கைத் தந்திரோபாயம்**

ஒரு முனைப்படுத்தப்பட்ட, இலகுவான தந்திரோபாயத் திட்டங்களை வெற்றிகரமான நடவடிக்கைகளுக்காகக் கெரில்லாக்குழு அவசியம் உருவாக்க வேண்டும். இத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது, கனிசமானளவு கூடுதலாக வெற்றிகள் பெறப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக இரண்டு அனுபவமுள்ள தகர்ப்பு வேலையாட்களின் பலத்துடன் வெடி பொருள் அல்லது வெடிமருந்துக் களஞ்சியத்தைத் தகர்க்கலாம். வாகனப் பாதைகளிலுள்ள பாலங்களைத் தகர்த்தல் போன்ற பாரிய வெற்றிகளைச் சிறிய குழுக்களாலேயே எட்டமுடியும். சிறிய படைகளாகச் செயற்பட்டு எதிரிக்குத் தாக்கத்தை விளைவிக்கக்கூடிய அடியைக் கொடுக்கின்றனர்.

நடவடிக்கைக்குத் திட்டமிடும்போது, பின்வரும் தந்திரோபாயச் செயற்பாடுகளைக் கவனத்திலெடுப்பது அவசியம் :



பெரிய பரப்பில் எதிரிக்குத் திகைப்புத் தாக்குதலைத் தொடுக்கும்போது, குழுக்கள் பதுங்கித் தாக்குதல்களை ஒழுங்குபடுத்திப் பின்வாங்குதலையும் தொடர்ச்சியான தாக்குதலைத் தொடுப்பதையும் கவனத்திலெடுத்தல்

கனிசமானளவு படைகள் சில குழுக்களாகப் பல திசைகளிலிருந்து எதிரிமீது செறிவான தாக்குதலைத் தொடுத்தல்.

கெரில்லாக் குழுக்கள் தோற்றமடைந்துள்ள ஆரம்ப காலப்பகுதியில், ஆயுதங்களைப் பெற்றுக்கொள்வதற்காகவும் குழுக்களின் பலத்தை அதிகரிப்பதற்காகவும் இராணுவ வீரர்கள், காவற்படைகள், இராணுவத்தினதும் காவற்றுறையினரதும் சிறிய படைப்பிரிவுகள் போன்றவற்றின் மீது தாக்குதலைத் தொடுக்க வேண்டும்.

எதிரியினதும் படைவீரர்களதும் மனவலிமையை உடைப்பதற்காகக் கெரில்லாக்கள் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தித் தொடர்ச்சியான தாக்குதல்களைத் தொடுக்க வேண்டும்.

முக்கியமான இலக்குகள் எதிரியின் பலப்படுத்தப்பட்ட நிலைகள் போன்றவற்றின் மீது தாக்குவதற்காகக் கனரகஆயுதங்களைப் (ஆட்டிலறிகள், மோட்டார்கள், கனரக இயந்திரச் சுடுகலன்கள்) பயன்படுத்த வேண்டும். இங்கே குறிப்பிடப்படுகின்ற விடயம் யாதெனில், இந்நிலைமையில் எதிரி பெரியளவிலானபடைகளைமிகச்சிறிய இடத்துணுடொன்றில் குவிப்பதனால், கனரகஆயுதச் சூடுகளால் அவனுக்குப் பாரிய இழப்பை ஏற்படுத்தலாம்.

எதிரியுடன் முட்டுப்படும் சகல சந்தர்ப்பங்களிலும் அவசியம் தற்காத்துக்கொள்ள வேண்டும். வசதியான கணத்தைப் பயன்படுத்தி, எதிரியிடமிருந்து விடுவித்துச் சென்று, சமருக்கு வசதியான புதிய இடத்தில் நிலையெடுக்க வேண்டும்.

எதிரியுடன் நீண்ட நேரம் முட்டுப்பட்டவாறு ஒருபோதும் இருக்கக்கூடாது. ஆகக்கூடுதலாக ஓர் இரவு மாத்திரமே இருக்கலாம். கெரில்லாக்கள் எதிரிக்குத் தெரியாமல் அவனிடமிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு சென்று புதிய வசதியான இடத்தில் நிலையெடுக்க வேண்டும் அல்லது மறைப்பான இடங்களில் (இரகசிய இடங்கள்) பதுங்கிக்கொள்ள வேண்டும். கெரில்லாக்கள் சென்றுவிட்டார்களென எதிரி தீர்மானித்தபின், கெரில்லாக்கள் மீளத் தமது பழைய நிலைக்குச் செல்லலாம்.

கெரில்லாக்களின் நகர்வு

சமர் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்குச் செல்லல், பிறிதொரு இடத்திற்குக் கெரில்லாக் குழுக்கள் தங்கச் செல்லுதல், எதிரியைப் பின்தொடர்ந்து செல்லுதல் போன்றவற்றிற்காகக் கெரில்லாக்கள் வேக நகர்வை மேற்கொள்கின்றனர். இந் நகர்வுகள் மிக வேகமானதாக மேற்கொள்ளப்படுவது அவசியமாகும். எதிரியின் ஆகக்கூடுதலான படைகளிடமிருந்து தம்மை விடுவித்துத் தப்பிச்செல்வதற்கான நகர்வும் குழுக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமிருக்கின்ற இடமொன்றிற்கு இழப்பின்றிச் செல்வதற்கான நகர்வும் குறிப்பாக உச்ச வேகத்தில் இருக்க வேண்டும். நகர்வுப் பாதையை வரைபடத்தைக் கொண்டுகட்டளையாளன்தீர்மானிக்க வேண்டும். அல்லது நகர்வுப்பாதை செல்கின்ற பிரதேசத்தை நன்கறிந்து வழிகாட்டியைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். மிக முக்கியமாகப் பிரதான வீதிகளை மாத்திரமன்றி, நடை பாதைகளையும் பயன்படுத்தவேண்டும். நகர்வுப் பாதையைத் தெரிவுசெய்யும் போது, கட்டளையாளன் மிகவும் பொருத்தமான, மறைவான நகர்வுப்பாதை, நேரம், கடப்பிற்கு அவசியமானவை போன்றவற்றைத் தீர்மானிக்க வேண்டும்.

நகர்வுப் பாதையைத் தெரிவுசெய்யும் போது, சிலவேளைகளில் குழுத்தலைவன் அணியிலுள்ள உறுப்பினர்களின் அறிவுரையைக் கேட்கலாம். அவர்களின் கருத்துக்களுக்கும்பரிந்துரைகளுக்கும் செவிசாய்க்க வேண்டும்.

நகர்வை மேற்கொள்ளும் போது, அணிக்கு முன்னால் வேவுக்காரர்கள் செயற்பட வேண்டும். அவர்களுடன் பார்வைத் தொடர்பு வைத்துக்கொள்ளப்பட வேண்டும். நகரும்அணியின்பக்கவாட்டுக்களிலும் பின்னாலும் பக்கவாட்டு மற்றும் பின்பக்கக் காவலணிகள் காப்பளிக்கின்றன.

**நெற்றிபொறியன்**

**தொடர்வான்...**

# தமிழ் தேசியத்தை பாதுகாக்க வடகிழக்கு இணைப்பு அவசியம் இல்லையேல் ஆபத்து



இந்த நாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகளுடனான 30 ஆண்டுகால யுத்தம் நடைபெற்று முடிவடைந்துள்ள நிலையில் அரசியல் ரீதியான தீர்வினை பெற்றுக்கொள்ளும் நோக்கோடு தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய அரசியல் கட்டமைப்பாகவே தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்டது. ஆயுதம் தாங்கிய போராளிகளை பயங்கரவாதிகள் என முத்திரை குத்திய இலங்கை அரசு தொடர்ந்தும் தமிழினத்தை அடக்கியாளுகின்ற ஒரு நிலைமையை தற்பொழுது கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. கொரோனா வைரஸினுடைய தாக்கம் ஒருபக்கத்தில் இருந்தாலும் மறுபக்கத்தில் தமிழின சுத்திகரிப்பு மறைமுகமாக இந்த நாட்டில் இடம்பெற்றுவருகிறது.

தற்பொழுது இருக்கக்கூடிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதனூடாகவே தாயகம். தேசியம். சுயநிர்ணய உரிமை என்பவற்றை முன்னெடுத்து செல்லமுடியும். நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் தற்போதைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் ஒருசில அணுகுமுறைகளை மேற்கொண்டாலும் தொடர்ந்தும் இந்த நாட்டில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுகள் இடம்பெற்றுக்கொண்டே இருக்கிறது. இதில் அரசியல்வாதிகளும் விதிவிலக்கல்ல. தற்பொழுது முஸ்லிம் அரசியல்வாதியான கொழும்பு மாவட்ட முன்னாள் ஆளுநர் அசாத்சாலி. முன்னாள் வர்த்தக அமைச்சர் ரிஷாட் பதியூதின் ஆகியோரின் கைதும் முஸ்லிம்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த அதிர்வலைகளுக்கு முக்கிய காரணமாக இலங்கைத்தீவில் சஹ்ரானினுடைய குண்டுத்தாக்குதலே அமைந்தது. முஸ்லிம் தீவிரவாதிகள் இந்த நாட்டில் தாக்குதலை நடத்தியிருந்தது என்பது வேறு. தமிழீழ விடுதலைப்புலிகளின் இலங்கை அரசாங்கத்துடனான மோதல் என்பது வேறு. இரண்டையும் ஒன்றுடன் ஒப்பிட்டு சிறுபான்மையின மக்களை பயங்கரவாதிகள் என அரசாங்கம் முத்திரை குத்தியிருப்பது என்பது ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது ஒன்று.

ஆகவே தமிழ் பேசும் மக்களுடைய அரசியல்கட்டமைப்பைவளர்ப்பதற்கான நடவடிக்கைகளை தமிழ் அரசியல் தலைவர்கள்திரைமறைவில்ஆரம்பிக்க வேண்டும். எல்லா விடயங்களையும் அரசாங்கத்துடன் பேசி அதற்கான தீர்வை பெற்றுக்கொள்ளமுடியும் என்பது பகல் கனவு. போருக்கு முன்னரான காலப்பகுதி என்பது வேறு. போருக்கு பின்னரான காலப்பகுதி என்பது வேறு. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தமிழ் அரசியல் தலைவர்கள் அரசாங்கத்துடன் பேரம் பேசுகின்ற ஒரு சக்தியாக செயற்பட வேண்டுமே தவிர இணக்க அரசியலைமேற்கொள்வதனூடாகதமிழ் பேசும் மக்களுக்கான இலக்கை நாம் அடைந்துவிட முடியாது. பாராளுமன்ற உறுப்பினர்களை பொறுத்தவரை இந்த கொரோனா வைரஸினுடைய தாக்கம் ஒருபுறம் இருக்க இதற்குள் சீன அரசாங்கம் தனது சர்வதேச விகார பரவலாக்கத்தை கட்டவிழ்த்து விட்டிருந்தது. இதற்கு துணைபோகின்ற ஒரு நடவடிக்கையாகவே இலங்கை அரசாங்கம் சீனாவுடன் கைகோர்த்துள்ளது.

ஆகவே இன்றைய சூழ்நிலையில் கொரோனா வைரஸை பரப்பிய சீனா உலகில் சர்வதிகார நாடாக கருதியோ என்னவோ இலங்கையரசு கண்மூடித்தனமான செயற்பாடுகளிலே களமிறங்கியுள்ளது. ஆனால் சீன அரசாங்கத்தினால் இலங்கைக்கு நேரப்போகின்ற அல்லது நேர்ந்துகொண்டிருக்கின்ற அபாயத்தை சற்றும் சிந்திக்காதவர்களாகவே இலங்கை அரசு செயற்படுகிறது. எது எவ்வாறிருப்பினும் ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்வை என்ற பழமொழிக்கு அமைவாக அரசாங்கத்தினுடைய செயற்பாடுகள் சர்வதேச ரீதியாக ஒரு நட்புறவை ஏற்படுத்திக்கொண்டாலும் மாற்று நடவடிக்கைகளாக தமிழ் தேசிய கூட்டமைப்பு வியூகங்களை வகுத்து தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வினை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் செயற்பட வேண்டும். தொடர்ந்தும் இந்த நாட்டில் அரசியலை தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்று தற்பொழுது இருக்கும் அரசாங்கம் நினைக்குமானால் இந்த நாட்டில் மீண்டுமொரு இனக்களவரம் உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

விடுதலைப்போராட்டத்தை மலுங்கடிக்க செய்துவிட்டோம்என்றமமதையில்தமிழ் தேசிய மக்கள் மீது திணிக்கப்படுகின்ற அரசியல் நெருக்கடிகளை தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாத சூழல் உள்ளது. வடகிழக்கு. மலையகம் உட்பட வாழுகின்ற தமிழ் பேசும் மக்களுக்கான உரிமைப்போராட்டமே இந்த நாட்டில் இடம்பெற்றது.


தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் தனது சுயலாப அரசியலுக்காக அவர் போரிடவில்லை. ஆகவே தான் அவர் பற்றி உலக நாடுகளும் பேசுகின்றன. ஒரு இனவிடுதலைக்கான போராட்டத்தை கையிலெடுப்பவர்கள் மீது பயங்கரவாத சாயம் பூசுகின்ற நடவடிக்கைகளை அனைத்து நாடுகளும் எடுப்பது வழமை. அதற்காக ஒரு இனத்தை அடக்கியாளுகின்ற பொழுது அதன் கொடுமைகளை சகித்துக்கொண்டு அனைவராலும் இருக்க முடியாது. இவ்வாறானதொருசூழ்நிலையில்தமிழ் தரப்பு அதிதீவிரமான முடிவுகளை எடுக்க வேண்டும். இன்றைய காலகட்டத்தில் கொரோனா வைரஸை காரணம் காட்டி அரசியல் நிலைப்பாடுகளுடைய கவனம் வேறு திசைக்கு திருப்பப்படுகிறது. பூகோள அரசியலினை கருத்தில் கொண்டு சர்வதேச ரீதியில் தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வு திட்டத்தினை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை தமிழ் தரப்பு மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக யுத்தத்தின் பின்னரான காலப்பகுதிகளில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம். பௌத்த சிலைகளை இலங்கையின் வடகிழக்கு பகுதியில் நிறுவுதல். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையங்களில் பௌத்த விகாரைகளை கட்டுதல். தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் குருந்தூர் மலை. வெடுக்குநாரி. ஒதியமலை போன்ற தமிழர்களின் தொண்மைவாய்ந்த நிலப்பகுதிகள் பௌத்த இனவாதிகளினால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாகஈழப்போரின்இறுதிக்கட்டத்தில் கொலை செய்யப்பட்ட | இலட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு சமாதிகட்ட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை தொடருமானால் காலப்போக்கில் தமிழர் தாயக பிரதேசங்களில் இருக்கக்கூடிய தொல்பொருள் ஆராய்ச்சி பகுதிகள் மட்டுமன்றி தமிழினம் வாழ்ந்த இடங்களும் இல்லாதொழிக்கப்படும் சூழல் உருவாகும். ஆகவே தமிழ் தேசிய அரசியல்வாதிகள் இதனை கருத்தில் கொண்டு தமிழ் மக்களுக்கான உரிமைகளை வென்றெடுக்க மாற்று வழிகளை அமைத்து செயற்பட வேண்டும் இல்லையேல் ஆபத்து.

**இரணியன்**

# சர்வதேச அணுகுமுறைகளும் கொரோனா வைரஸ் தாக்கமும்



இன்று உலக நாடுகளை அச்சுறுத்திக்கொண்டிருக்கின்ற கொரோனா வைரஸ் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் பேசப்பட்டு வந்தாலும் இதே சர்வசேத அரங்கில் ஒரு வியாபார தந்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. வீற்றோபவர் கொண்ட நாடுகளை பொறுத்தவரையில் ஆசிய பிராந்தியத்தில் இருக்கக்கூடிய நாடுகளை கொத்தடிமைகளாக வைத்திருப்பதே அவர்களின் பிரதான நோக்கம்.

அந்த வகையில் அமெரிக்காவை பொறுத்தவரையில் கடந்த காலங்களில் நானே சர்வதிகாரி என்று இருந்த காலம் மாற்றம் பெற்று தற்பொழுது நாட்டின் சர்வதிகாரியாக சீனா தன்னை தயார்ப்படுத்தி வருகிறது. 95 சதவீ தமான கொரோனா மருந்து வகைகள் தடுப்பூசிகள் அதற்கான அங்கிகள் என பலகோடி மில்லியனை சீனா தற்போதைய சூழ்நிலையில் சம்பாதித்துவருகிறது. சீனாவை பொறுத்தவரையில் தற்பொழுது கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுவிட்டது. ஆனால் ஏனைய நாடுகளில் தொடர்ந்தும் கொரோனா வைரஸின் தாக்கம் இருந்து வருவதை பார்க்கும் பொழுது சீனா அரசாங்கம் திட்டமிட்டே அதனை செய்துவருகிறது எனலாம். வுகான் நகரத்தில் நடந்த சம்பவங்களை உற்று நோக்கும் பொழுது எவ்வாறு இந்த கொரோனா வைரஸ் அனுப்பப்பட்டது என்ற விவரம் தற்பொழுது அறிப்பட்டிருக்கிறது. சர்வதேச அரங்கில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார பிரச்சனைகள் அதனை சீர் செய்வதற்கு பல நாடுகள் இன்று சீன அரசாங்கத்திடம் கையேந்தி நிற்கிறது. சளி, காய்ச்சல், மூச்சுத்திணறல் போன்றவை ஒருவருக்கு இருக்கும்பட்சத்தில் அதனுடைய உச்சபட்ச தாக்கம் கொரோனா வைரஸாக மாறுகிறது. இதனால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு இறந்துபோகும் சூழ்நிலையும் உருவாக்கப்படுகிறது. இந்த கொரேனா வைரஸ் காற்றிலும் பரவக்கூடிய அபாயம் இருப்பதாக கூறப்படுகிறது. கொரோனா வைரஸை பரிசோதித்துப்பார்த்து சீனா நாடு இதனால் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் அதை தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் செய்துவிட்டே இந்த கொரோனா வைரஸை பரப்பியது.

மருத்துவத்தில் தலைசிறந்த நாடாக கருதப்படும் இந்தியா கூட தற்பொழுது பாரிய தடுமாற்றத்தை கண்டுள்ளது. சர்வதேச ரீதியில் இதனை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்ற சுகாதார மையத்தினுடைய அறிக்கைகளை பார்க்கும் பொழுது வெறும் கண்துடைப்பாகவே அது அமையப்பெறுகின்றது.

ஒவ்வொரு நாட்டவரும் கொரோனா வைரஸை தடுப்பதற்கான அறிவுரைகளை கூறுகின்றார்களே தவிர, கை கழுவுதல், முகக்கவசம் அணிதல், பொலித்தீனால் உடலை பாதுகாத்தல் போன்ற விடயங்கள் ஒரு தற்பாதுகாப்பாக இருக்கிறதே தவிர கொரோனா வைரஸை அழிக்க உகந்தவையல்ல.

குறிப்பாக தொடர்ச்சியாக இருமல் ஒரு மணி நேரத்திற்கு உள் தொடருமாக இருந்தால் அது கொரோனா வைரஸிற்கான முதலாவது அடையாளமாக இருக்கிறது என்கின்றார்கள். இரண்டாவது விடயமாக ஒரு காய்ச்சல் உடம்பில் 37.8 டிகிரி செல்சியசை விட வெப்பம் அதிகரிக்குமாக இருந்தால் கொரோனா வருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கிறது. அல்லது வாசனை மற்றும் சுவையை உணர முடியாது போனால் அது கொரோனா வைரஸ் தாக்கத்தின் அறிகுறியாக அமைகிறது எனலாம்.

இவை ஒரு மனிதனிடத்தில் பொதுவாக இருக்கக்கூடியவை. உலக சுகாதார நிறுவனம் கூறுகின்ற கொரோனா தொற்று அறிகுறிகளாக:

**காய்ச்சல் பொதுவாக அதிகரிப்பது**
**இருமல் அதிகரிப்பது**
**சுவை மற்றும் வாசனையை உணர முடியாமை**
**தலைவலி அதிகரிப்பு**
**மூக்கடைப்பு, சளி வடிதல் போன்றவை**
**தொண்டையில் சிலவேளை எரிசல்**
**தொடர் தும்மல்**
**சுவாசித்தலில் சிக்கல்**

இவ்வாறிருக்க இருமல் வந்தாலே கொரோனா வைரஸ் என்றதொரு நிலைப்பாடு அது முற்றிலும் தவறானதொன்று. எந்தவொரு வருத்தமும் ஒரு மனித உடலில் 14 நாட்கள் இருக்கக் கூடியவை அந்த 14 நாட்களுக்குள் சிகிச்சை வழங்காமல் இருந்தால் அவர் மரணிக்கக்கூடும். உலக சுகாதார அமைப்பானது இந்த கொரோனா வைரஸை சர்வதேச ரீதியாக கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது. இனி நான்காம் ஐந்தாம் அலை ஏற்பட்டாலும் கொரோனா வைரசுடன் சிறிது காலம் மக்கள் வாழ வேண்டிய சூழல் ஏற்படும்.

ஆகவே இதனை தடுப்பதற்கான வழிமுறைகளாக சர்வதேச ரீதியில் இடம்பெறுகின்ற நாடுகளினுடைய அரசியல் காய் நகர்வுகளின் தமது நாட்டை முன்னிலைப்படுத்துவதற்கான ஒரு தந்திரோபாய நிழல் யுத்தமே இந்த கொரோனா வைரசினுடைய செயற்பாடு. தற்பொழுது சீனாவுடன் பல நாடுகள் கைகோர்த்திருப்பது என்பது அதன் பின்வரும் காலங்களில் ஆபத்தான கட்டத்தையே எட்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

ஆகவே சர்வதேச ரீதியாக உல்லாசப் பயணிகளின் வருகையை கட்டுப்படுத்துவது மட்டுமல்லாது சீனாவினுடனான நட்புறவை தற்காலிகமாக இடைநிறுத்துவதுடன் குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் இலங்கையில் இருந்த பொழுது எந்தவொரு நாடும் தன்னிச்சையாக இலங்கையில் செயற்பட முடியாது போனது. அதுபோன்றதொரு நிலைமை உருவாக வேண்டும். 20.1 மில்லியன் மக்கள் இதுவரையில் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்றால் இந்த கொரோனா வைரஸினுடைய தாக்கம் எந்தவொரு அளவிற்கு சமூக ரீதியாக தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த வைரஸ் தொடர்பாக பலரும் பல ஆய்வுகளை செய்தும் ஆய்வுகள் அனைத்தும் தோல்வியிலே முடிவடைந்திருக்கிறது.

குறிப்பாக புற்றுநோயை கூட முற்றாக குணப்படுத்தும் மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஒரளவேனும் கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகள் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளது. இந்த கொரோனா வைரஸினுடைய தாக்கத்தினால் ஒரு நாட்டின் பொருளாதாரம் முற்றுமுழுதாக பாதிக்கப்படுகிறது என்றே கூறலாம்.

ஆகவே பாதிக்கப்படாத சீனா அல்லது பாதிப்பிலிருந்து மீள் வந்த சீனா தற்பொழுது உலக சந்தையில் ஏனைய நாடுகளை ஒரு கடன்கார நாடாக மாற்றுவதற்கு முயற்சிகள் எடுத்துவருகிறது. இலங்கையை பொறுத்தவரையில் ஒரு வீதமானோர் கூட முற்றாக கொரோனா தடுப்பூசி பயன்படுத்தவில்லை. உலக நாடுகள் எல்லாம் கொரோனா வைரஸ் தொற்று பரவுகின்ற பொழுது இந்த நாடு உலக அழிவை நோக்கி செல்கின்றது என்று சாஸ்திரிகள் கூறுகின்றார்கள்.

ஆனால் குறித்த கொரோனா வைரஸை இந்த சாத்திரிகளினால் கூட கட்டுப்படுத்த முடியவில்லை. ஆலயங்களில் பலர் பூஜை வழிபாடுகளில் இதற்காக ஈடுபட்டு வந்த போதிலும் இறுதியாக இது இறைவனால் கொடுக்கப்பட்டது என்றே கூறினார்கள். இது இறைவனால் அனுப்பப்பட்ட கொடிய நோயுமல்ல. இது குறித்த சீன நாட்டினால் உலகம் முழுவதும் பரப்பப்பட்ட ஒரு வைரஸாகும். மனிதன் தன்னுடைய பகுத்தறிவுக்கு எட்டிய வகையில் செயற்படுகிறான். இறைவனால் கொடுக்கப்படுகின்ற வாதைகளை பொறுத்தவரையில் அந்த வாதைகள் உலக அழிவுக்கு ஒப்பானது என்று பைபிள், குர்ஆன், சமஸ்கிருதம் கூறுகின்றது.

ஆகவே இறைவன் மீது தப்பு சொல்வது தவறு. தற்பொழுது சீன நாட்டுடன் நாடுகள் மோதுவதற்கு தயங்குகின்றன. அமெரிக்கா கூட தயங்குகின்றது. எமது சுய பாதுகாப்பை அல்லது நாடுகளின் சுய பாதுகாப்பை நாங்களே தற் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது என்பதனையே இன்றைய பூகோள அரசியல் கொரோனா வைரஸ் எடுத்துக்காட்டுகிறது எனலாம்.

**நெற்றிப்பொறியன்**

# முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியூதின் ஒரு பயங்கரவாதி



பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியூதின் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார். அவருடைய கைது தொடர்பாகவும் அதனுடைய பின்னணிகள் தொடர்பாகவும், இதனால் நாட்டில் மக்கள் குழப்பமடைய வேண்டிய சூழல் இல்லை என்பதனையும் இந்த இடத்தில் மிக ஆணித்தரமாக கூற வேண்டிய தேவை இருக்கிறது காரணம் என்னவென்றால் பயங்கரவாத தடைச்சட்டம் என்றால் என்ன என்பது இந்த நாட்டில் இருக்கின்ற மக்களுக்கு தெரியும். இந்தியாவிலே பொடா தடைச்சட்டம் என்று கூறுவார்கள். அது ஜெயலலிதா இருந்த காலகட்டத்திலே இங்கிருக்கக்கூடிய தமிழீழ விடுதலைப்புலிகள் இந்தியாவிற்குள் நுழைந்து தாக்குதலை நடத்தமலோ அல்லது அவர்கள் அந்த நாட்டிற்குள் உள்நுழைந்து தமது திட்டங்களை செய்யாமல் இருப்பதற்காக பொடா என்ற பயங்கரவாத தடைச்சட்டம் என்பது கொண்டுவரப்பட்டது.

தற்பொழுது இலங்கை அரசாங்கமானது எமர்ஜன்சியை கூட கொண்டுவரலாம் அது பிரச்சனையில்லை. தற்பொழுது பயங்கரவாத தடைச்சட்டமும் அமுலில் இருக்கின்றது அதுவும் பிரச்சனையில்லை. இதைவிடவும் வேறு சட்டங்களை கொண்டுவந்தாலும் எல்லாம் தற்பொழுது நடைமுறையில் இருக்கின்றது. அதாவது ஒருவரை கைது செய்ய வேண்டுமாக இருந்தால் அவர்கள் ஒரு குடுவை, கஞ்சாவை போட்டு கைது செய்வார்கள், அல்லது ஆயுதங்களை வைத்து கைது செய்வார்கள். இவ்வாறெல்லாம் வழமையாக கடந்த கால மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்திலே இவையனைத்தும் இடம்பெற்றது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் 7500 பேர் கைது செய்யப்பட்ட பொழுது இந்த முஸ்லிம் அரசியல் தலைமைகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் 16, 17 பேர் இருந்தார்கள். ரவூப் ஹக்கீம் அவர்கள், அமைச்சர் ரிசாட் பதியூதின் அவர்கள், அதாவுல்லா அவர்கள் இப்படி பலர் இருந்தார்கள். இவர்கள் அந்த காலகட்டத்தில் ஒரு தமிழ் இளைஞர் பயங்கரவாத தடைச்சட்டத்திலே பிடிபட்டு பூசாவிலே அல்லது 4ஆம் மாடியிலே TID, CID,NIV யினால் பிடிக்கப்படுகின்றவர்கள் 4ஆம் மாடியிலே இருக்கின்ற பொழுதும் இவர்கள் எந்த குரலும் கொடுக்கவில்லை. பயங்கரவாத தடைச்சட்டம் என்ன என்பது பற்றி இவர்களுக்கு தெரியாமலும் இல்லை.

ஆனால் ஒரு தமிழ் இளைஞன், தமிழ் அரசியல்வாதிகள் கைது செய்யப்பட்டு சிறை கொண்டு செல்கின்ற பொழுது குரல் கொடுக்காத முஸ்லிம் அரசியல்வாதிகள் தற்பொழுது மட்டும் முன்னாள் அமைச்சரை கைது செய்திருக்கின்ற பொழுது அதாவது குறிப்பாக குண்டுத்தாக்குதல் தொடர்பாக விசாரிப்பதற்காக சந்தேகத்தின் பெயரில் 90 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியூதின் தொடர்பாக தற்பொழுது முதலைக்கண்ணீர் வடிக்கின்றார்கள். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 7 ஆயிரம் பேரினுடைய நிலைமையை சிந்தித்துப்பாருங்கள். அதிலும் தெரியாதவர்கள் பலரை இலங்கை அரசு கொலை செய்துவிட்டது. பூசாவில் எங்கு தோண்டினாலும் புதைகுழிகளை தோண்ட முடியாது அங்கே மண்ணை வெட்டினால் எலும்புக்கூடுகள் தான் வரும். பூசா முகாமிலே பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழே C, C1, A, A1, JVP ஐ வைத்திருந்த சிறைகள் இருக்கின்றன. அங்கே கொடுமைகள் தான் இடம்பெற்றது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு, அங்கு காகக்குளிப்பு தான் குளிக்க விடுவார்கள். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டால் அதன் தன்மை எவ்வாறு இருக்கும் என்பது எங்களுக்கு தெரியும். ஊடகவியலாளர்கள் என்ற ரீதியிலும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் சிறையில் தடுப்பிலே அதாவது 4ஆம் மாடியிலே பூசாவிலே மாறி மாறி இருந்த பொழுது அதன் வேதனைகளும் வலிகளும் எங்களுக்கு தெரியும்.

ஆகவே அந்த காலகட்டத்திலும் கூட புத்தளத்தை சேர்ந்த அலி, கில்மி என்ற இருவர் கைது செய்யப்பட்டிருந்தார்கள். அவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். நாங்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசல் அனுபவித்து வெளியில் வருகின்ற வரையிலும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அந்த அலி கில்மி போன்றவர்களும் விடுதலை செய்யப்படவில்லை. அவர்களை போன்று கிட்டத்தட்ட 25 க்கும் மேற்பட்டோர் பயங்கரவாத தடைச்சடத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த பொழுது இந்த முஸ்லிம்களுக்காக முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்காக குரல் கொடுக்கின்ற முஸ்லிம் அரசியல் புத்திஜீவிகள் அல்லது மதுரசாக்களை வைத்திருக்கின்ற நீங்கள் அனைவரும் எங்கு சென்றீர்கள். அப்பொழுதும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டார்கள். பூசா முகாமிலே அடைக்கப்பட்டார்கள். சித்திரவதை செய்யப்பட்டார்கள். 4ஆம் மாடி 6ஆம் மாடியிலே தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அது தமிழீழ விடுதலைப்புலிகளினுடனான போராட்டத்திற்கு பங்களிப்பு வழங்கியதால் அவர்கள் அன்று அவசரகால தடைச்சட்டம் இருந்தது. பயங்கரவாத தடைச்சட்டமும் இருந்தது. இந்த இரண்டு தடைச்சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டு சிறைவாசல் அனுபவித்தார்கள்.

ஆகவே பயங்கரவாத தடைச்சட்டம் இவ்வாறிருக்க தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய போராட்டம் தற்பொழுது முடிவு பெற்று 11 ஆண்டுகளை கடந்துள்ள நிலையிலும் இன்னும் இந்த நாட்டில் பயங்கரவாத தடைச்சட்டம் எடுக்கப்படவில்லை என்றால் அதன்பின்னணி என்னவென்று ஆராயப்படவேண்டிய தேவை இருக்கிறது. இஸ்ரேல் நாடு என்பது பல அமைப்புகளை செயற்படுத்துகிறது. உலகத்தில் இருக்கக்கூடிய 200 நாடுகளிலே 175 நாடுகளினுடைய பிரதிநிதிகளை அந்த நாட்டுக்குள் வரவழைத்து முகாட் என்கின்ற புலனாய்வு கட்டமைப்பு பல தீவிரவாத குழுக்களை குறித்த நாடுகளுக்கிடையே மோதுவதற்காக அல்லது அந்த நாட்டிலே முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு தீவிரவாதபோக்கை கட்டவிழ்த்துவிட்டு அவர்களை குறித்த நாட்டிலிருந்து அந்நியப்படுத்துகின்ற அல்லது அவர்களுக்கு தேவையான முஸ்லிம்களை வைத்துக்கொண்டு ஏனையவர்களை குழப்பிவிடுகின்ற சூத்திரத்தை இஸ்ரேல் நாடு செய்துவருகிறது. இதிலொரு அங்கமாகத்தான் இலங்கையில் தற்பொழுது இருக்கின்ற அரசுக்கு ஆதரவாத இஸ்ரேலி னுடைய மொசாட் புலனமைப்பு கட்டமைப்பு செயற்படுகிறது.

ஆகவே அவர்கள் செய்வதை செய்வார்கள். தமிழீழ விடுதலைப்புலிகளை 35 நாடுகள் சேர்ந்து அழிப்பதற்கு முக்கிய காரணமாக அதிலும் சீனா அமெரிக்கா இந்தியா போன்ற நாடுகள் பங்கெடுத்தன. அதிலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தலைமையிலே இனி தமிழீழ விடுதலைப்புலிகள் இயங்கக்கூடாது என்ற நிலைப்பாட்டை தான் சர்வதேசம் கொண்டிருந்தது. ஆனால் அதனை சாதகமாக பயன்படுத்திக்கொண்ட இலங்கை அரசானது இனிவரும் 10 ஆண்டுகளின் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் பேச்சுக்களோ அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளின் எச்சங்களோ வடகிழக்கிணைந்த தமிழர் தாயகமோ இணையக்கூடாது. இவ்வாறிருக்க முஸ்லிம்கள் தமக்கான ஒரு தனியான தொரு அலகை கேட்கின்ற இடத்தில் தான் முஸ்லிம்களுக்கு எதிரான அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் இடம்பெறுகின்றது. சில வேளை மகிந்த ராஜபக்ச, கோட்டபாய ராஜபக்ச தோற்கடிக்கப்பட்டிருந்தால் முஸ்லிம்களின் வளர்ச்சியும் அவர்களின் தீவிரவாத போக்கும் தமிழினத்தையும் சிங்கள இனத்தையும் அடக்கியாளும் தலைமைத்துவத்தைக்கூட அவர்கள் சஹரானினுடைய குண்டுத்தாக்குதல் இந்த நாட்டில் இடம்பெறாது இருந்தால் அவர்கள் வளர்த்துக்கொண்டு சென்றிருந்திருப்பார். கிட்டத்தட்ட 1400 கோடி ரூபாய் பணம் சஹரானினுடைய குண்டுத்தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டது. அதைவிட பல சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது.

ஆகவே ஒரு கட்டமைப்பை ஒரு நாட்டுக்குள் வளர்க்க வேண்டுமாக இருந்தால் பணவளம் தேவை, ஆயுத வளம் தேவை, புலனாய்வு கட்டமைப்பு குறிப்பிட்ட சில மதுரசாக்களில் இருந்து அங்கு போதிக்கப்படுகிறது. இஸ்லாம் ஒரு கூர்வாள் அந்த மதப் பிரச்சாரம் அங்கு ஊட்டப்படுகிறது. அதுபோன்று பௌத்த தீவிரவாதமும் இதுபோன்றே அந்த பகுதியில் நடக்கிறது. ஆகவே பயங்கரவாத தடைச்சட்டமானது எல்லாருக்கும் ஒன்று தான் ஆனால் தமிழ் மக்கள் மீது இந்த பயங்கரவாத தட்டம் கட்டவிழ்த்துவிடப்பட்ட பொழுது எந்தவொரு அமைச்சர்களோ முஸ்லீம்களோ குரல் கொடுக்காத நீங்கள் தற்பொழுது ஒரு முன்னாள் அமைச்சர் கைது செய்யப்பட்டிருக்கும் பொழுது கிளர்ந்தெழும்புவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. ஆனால் அவரோடு இருந்த சில முஸ்லிம் அரசியல்வாதிகள் கிளர்ந்தெழவில்லை. அவர்களைப் பற்றி அவருக்கு தெரியும். அதற்காக இந்த நோன்பு காலத்திலே முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியூதின் அவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டது என்பது ஒரு ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமும் அல்ல. அதன் பின் அவரை அழைத்து விசாரித்திருக்கலாம் இது போன்று சதாமுசைனையும் கூட அந்த நாட்டு மக்கள் கோபப்படும் வகையில் அரசாங்கம் அவரை அந்த காலத்திலே தாக்கிலிட்டது. அதுபோன்று இந்த சம்பவமும் முஸ்லீம்களிடையே என்னவாக இருந்தாலும் அவர் மக்கள் பிரதிநிதி என்ற வகையிலே அவர் 20 வருடங்கள் பாராளுமன்றத்திலே இருந்திருக்கிறார். அவரை கைது செய்தது என்பது உண்மையில் அது அடுத்த கட்டமாக ஒரு இஸ்லாமிய தீவிரவாதத்தை இந்த இலங்கை அரசாங்கத்தில் எதிர்பார்க்கின்றதா என்று கேள்வி எழுப்பப்படும் அளவிற்கு நிலைமை மோசமடைகின்றது.

ஆகவே இந்த பயங்கரவாத தடைச்சட்டத்திலே கைது செய்யப்பட்டு இன்னமும் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றவர்களைக் கூட அரசாங்கம் இன்னும் விடுதலை செய்யவில்லை. இறுதியாக நான் சிறைச்சாலையிலிருந்து வரும் போது 450 பேர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பூசா சிறையில் 4ஆம் மாடி 6ஆம் மாடியில் அடைக்கப்பட்டிருந்தார்கள். அதைவிட வெலிக்கடை சிறைச்சாலையிலே பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டோர் 1500 க்கும் மேற்பட்டோர் யுத்தத்தின் பின்னர் அங்கு தடுத்து வைக்கப்பட்டு சிறைத்தண்டனை கொடுக்கப்பட்டது. அதைவிட தமிழீழ விடுதலைப்புலிகள் புனர்வாழ்வழிக்கப்பட்டு 11 ஆயிரம் பேர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் விடுதலை செய்யப்பட்டார்கள். இது நல்ல விடயம் ஆனால் இங்கிருக்கும் பிரச்சனை என்னவென்றால் முஸ்லிம்களை பொறுத்த வரையில் அவர்களுடைய கலை, கலாச்சாரமானது ஒரு ஆபாசமற்றது என்று அவர்கள் தமக்கான ஒரு மத வழிபாட்டினையும் தமக்கான மாற்றத்திற்கான சட்டதிட்டத்தையும் இந்த நாட்டில் வைத்திருப்பது தவறு. இன்று பார்க்கும் பொழுது இஸ்லாமிய நாடுகள் இருக்கின்றன. இந்தோனேஷியா, பங்களாதேஷ், மலேஷியா, துருக்கி, துபாய், சவுதி போன்ற நாடுகள் இஸ்லாமிய நாடுகளாக இருக்கின்றன. இந்தோனேசியாவில் டான்ஸ்கிளப் கூட இருக்கிறது, விபச்சார விடுதிகள் இருக்கின்றது. அது போன்று மலேசியாவிலே ரிச்வில், யகுபார், பினாங் போன்றன முஸ்லிம் இடங்களிலே விபச்சார விடுதிகள் இருக்கின்றது. பங்களாதேஷில் தனியானதொரு சூனத்தெரு இருக்கின்றது. அங்கு 24 மணிநேரமும் விபச்சாரங்கள் இடம்பெறுகின்றது. பாலியலுக்கான மாத்திரைகள் வீதிகளிலே பகீரங்கமாக விற்கப்படுகின்றது. மலேஷியா, லிட்டில் இந்தியா போன்ற இடங்களிலே விற்கப்படுகின்றது. அதிகமாக சிங்கப்பூரிலே இந்தோனேஷியா மலேஷியாவில் இருந்து வந்து இங்கு தொழில் புரிந்துவிட்டு செல்வார்கள். இவர்கள் கராம் என்று எதனை குறிப்பிடுகின்றார்கள்.

குறித்த முஸ்லிம்களாக பிரகடனப்படுத்தப்பட்ட நாடுகளிலே இந்த விபச்சார தொழிலை அங்கீகாரத்துடன்செய்கின்றார்கள். துபாயிலே ஹோட்டல்கள் இருக்கின்றது டான்ஸ் கிளப் இருக்கின்றது. ஒரு மதத்தையோ மார்க்கத்தையோ வெளிப்படுத்தும் வகையில் இதனை கூறவில்லை. ஆனால் இங்கு பாடசாலை மாணவிகள் போடுகின்ற ஆடை அது ஆபாசத்தை தூண்டுகின்றது என்று இலங்கையில் இருக்கின்ற ஒரு இஸ்லாமிய தலைவர் கூறினார். அதுபோன்று சவுதிஅரேபி யாவிலே அவர்கள் ஒவ்வொருவரதும் வீடு களிலும் வுலூ பிளிம் பார்ப்பதற்காக சட்டிலைட் பூட்டியிருக்கின்றார்கள். இது 2001 ஆம் ஆண்டிலிருந்து பூட்ட ஆரம்பித்துவிட்டார்கள். தற்பொழுது அல்கோபார் என்ற இடத்திலே ஸ்ரேல் போர்ட் அந்த பகுதிகளில் இருந்து இலவசமாக வுலூ பிளிம் பார்ப்பதற்காக அனுமதி கொடுத்திருக்கிறார்கள். தற்பொழுது கியூமெக்ஸ் ரிசீவரில் போட்டால் அங்கு அனைத்தும் வேலை செய்யும். இதிலே ஒரு மதத்தை இதற்குள் திணித்து நாங்கள் கௌரவமானவர்கள் எங்களுக்கான மதம் வேறு மார்க்கம் வேறு என்றெல்லாம் கூறி ஏனைய சமுதாயத்தை இழிவுபடுத்தும் நசுக்கும் செயற்பாடுகளில் இந்த இஸ்லாமிய மதத்தவர்கள் முற்போக்குவாதிகள் ஈடுபடுவதால் நிச்சயமாக இந்த நாட்டில் பயங்கரவாத தடைச்சட்டம் வேண்டும் தான் என்ற அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

ஆகவே பயங்கரவாத தடைச்சட்டம் என்று தமிழ் மக்கள் தமக்கான தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற போராட்டத்தை ஒருபோதும் கைவிடப்படகூடாது. அதற்கான முன்னெடுப்புக்களை எல்லா தடைகளையும் தாண்டி செல்ல வேண்டும் என்பதே நாங்கள் இந்த இடத்திலே கூற விரும்புகின்றோம். அவர்களுக்கு எதிராக நடக்கின்ற விடயங்களில் குளிர்காய வேண்டிய தேவை எங்களுக்கு இல்லை. ஆனால் நியாயங்களை நாங்கள் எடுத்துக்கூறுகின்றோம். இதில் ஏதேனும் பிழை இருந்தால் நேரடியாக கூறுவோம். கருணாம்மாள் அவர்கள் நேரடியாகவே எங்களிடம் ஒரு நேர்காணலை வழங்கியிருந்தார். அதில் அவர் கூறிய விடயம் என்னவென்றால் காத்தான்குடி பள்ளிவாசலை நாங்கள் உடைக்கவில்லை தாக்கவில்லை என்ற நேரடி நேர்காணல் இருக்கிறது.

தொடரும்...

**இரணியன்**

# இஸ்ரேல் நாடு உருவான வரலாறு

இரண்டாம் உலகப்போர் முடிந்திருந்த நேரம். யூதர்களுக்காக 'இஸ்ரேல்' என்ற நாட்டை உருவாக்க அமெரிக்கா முடிவு செய்தது. 'ஹிட்லரால் கொடுமைப்படுத்தப்பட்டு சின்னாபின்னமானவர்கள் யூதர்கள். பாவம். அவர்கள் நாடில்லாதவர்கள். அவர்களுக்கு என்று ஒரு நாடு வேண்டாமா?' என்று யூதர்களுக்காக ஒரு நாட்டை அமைக்கும் முயற்சி நடந்தது. 'மேற்கு ஆசியாவின் பாலஸ்தீனப் பகுதிதான் யூதர்களின் தாயகப்பகுதி.எனவேபாலஸ்தீனத்தில் யூதர்களைக் குடியேற்றி புதிய நாட்டை உருவாக்குவோம்' என இந்த முயற்சிகள் தொடங்கின. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் இருந்தே பாலஸ்தீனத்தில் பிலிஸ்தியர் என்ற இனம் வாழ்ந்து வந்திருக்கிறது. அவர்கள் வேறு யாருமில்லை. பாலஸ்தீனர்கள்தான். பைபிளில், சிறுவன் தாவீது கவண் கல் எறிந்து கோலியாத் என்ற அரக்கனை வீழ்த்துவார் இல்லையா? அந்த கோலியாத் பிலிஸ்திய இனத்தைச் சேர்ந்தவர்தான்.

அமெரிக்காவைப் போலவே இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்க ஆர்வம் காட்டிய இன்னொருநாடு இங்கிலாந்து. காரணம், பாலஸ்தீனம் அப்போது இங்கிலாந்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. இஸ்ரேல் என்ற நாட்டை அங்கே உருவாக்கினால் பிரான்ஸ் நாட்டின் செல்வாக்கை அந்தப் பகுதியில் இல்லாமல் ஆக்கிவிடலாம் என்று இங்கிலாந்து கணக்குப் போட்டது. இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்க அமெரிக்காவும், இங்கிலாந்தும் இவ்வளவு ஆர்வம் காட்டியதற்கு இன்னொரு வேடிக்கையான காரணமும் இருந்தது. எகிப்தின் செங்கடல் பகுதியில் இருந்த சுயஸ் கால்வாயைப் பாதுகாக்க இந்த இரு நாடுகளுக்கும் ஒரு இரவுநேர காவலாளி தேவைப்பட்டார். அப்படி 'நைட் வாட்ச்மேனாக' நம்ம ஆள் ஒருவர் அந்தப் பகுதியில் இருந்தால் நன்றாக இருக்குமே என்பதற்காக, இஸ்ரேல் நாட்டை உருவாக்க அமெரிக்காவும், இங்கிலாந்தும் அளப்பரிய ஆர்வம் காட்டின.

1947ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பாலஸ்தீனத்தில் வாழ்ந்த அரபு மக்களின் எண்ணிக்கை 13 லட்சம். அதே காலகட்டத்தில் அங்கு வாழ்ந்த யூதர்களின் எண்ணிக்கை வெறும் 6 லட்சம் தான். பாலஸ்தீனத்தின் ஒட்டுமொத்த நிலப்பரப்பில் வெறும் 7 விழுக்காடுதான் யூதர்களுக்குச் சொந்தமாக இருந்தது.

பாலஸ்தீனம் இங்கிலாந்தின் கட்டுப்பாட்டுப் பகுதியாக அறிவிக்கப்பட்ட போது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக ஜெருசலேம் நகரில் ஒரே ஒரு யூத குடும்பம்தான் குடியிருந்தது. இப்போது புதிதாக உருவாகப்போகும் இஸ்ரேல் நாட்டுக்காக உலகம் முழுவதும் இருந்து யூதர்களை இறக்குமதி செய்யும் வேலை ஆரம்பமானது.

ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த யூதர்கள், 'அஸ்கெனாசி' என்ற பெயருடன் பாலஸ்தீனத்தில் குடியேறத் தொடங்கினார்கள். மேற்குலக யூதர்களும் இஸ்ரேலில் குவிய ஆரம்பித்தனர். இந்த இறக்குமதி வேலையில் மிகுந்த முனைப்புடன் இருந்தவர் டேவிட் பென்குரியன் என்ற யூதர். (பின்னாளில் இவர் இஸ்ரேல் நாட்டின் தேசத்தந்தையாக மாறினார்). 'பாலஸ்தீனத்தில் வாழ்பவர்கள் (பாலஸ்தீனர்கள்) பத்து காசுக்குக் கூட பயனில்லாதவர்கள். அவர்கள் இருந்தும் 'இல்லாத' மக்கள். ஆகவே பாலஸ்தீனத்தை மக்கள் இல்லாத நாடாக்க வேண்டும். .அதை நாடில்லாத மக்களுக்கு (அதாவது யூதர்களுக்கு) தர வேண்டும்' என்பது பெரியவர் பென் குரியன் உதிர்த்த மணிமொழி.

இஸ்ரேல் நாட்டின் இரண்டாவது பிரதமராக மாற இருந்த கோல்டா மேயர் என்ற அம்மையாரோ, 'பாலஸ்தீனிய மக்கள் என்று யாரும் இல்லை. அவர்கள் தனிநாடு பெறத் தகுதியில்லாதவர்கள்' என்று பேசினார். இஸ்ரேல் உருவாக இருந்த காலகட்டத்தில் இர்குன், லெகி என்ற பெயர்களில் இயங்கிய யூத தீவிரவாத இயக்கங்கள், ஜெருசலேம் நகரில் அடிக்கடி புகுந்து தங்கள் கைவரிசையைக் காட்டி வந்தன. பின்னாளில் இஸ்ரேலின் மற்றொரு பிரதமராக மாறிய மெனாகெம் பெகின் கூட, இர்குன் தீவிரவாத அமைப்பின் முன்னாள் உறுப்பினர்தான்.

இப்போது யார் யாரையோ பயங்கரவாதிகள் என்று இந்த உலகம், முத்திரை குத்தி வைத்திருக்கிறது அல்லவா? இந்த பயங்கரவாதத்துக்கு உலகில் முதன்முதலில் விதை தூவியவர்கள் இந்த யூத தீவிரவாதிகள்தான்.

1946 செப்டம்பர் மாதம், ஜெருசலேம் நகரில் உள்ள கிங் டேவிட் ஓட்டலுக்கு இந்த யூத தீவிரவாதிகள் குண்டுவைத்ததில் 91 பேர் பலியானார்கள். அவர்களில் 41 பேர் அரபுகள்,28பேர்இங்கிலாந்துகாரர்கள், 17 பேர் யூதர்கள். பன்னாட்டு மன்றமான ஐ.நா., பாலஸ்தீனத்தைப் பங்கு பிரிக்கும்போது, எங்கே ஜெருசலேம் நகரத்தையும், நெகேவ் பாலைவனப்பகுதியையும் ஜோர்டான் நாட்டுக்குத் தாரை வார்த்து விடுமோ, நமக்கு வெறும் மேற்கு கலிலேயா பகுதிதான் மிஞ்சுமோ என்ற பயம் யூத தீவிர வாதிகளுக்கு ஏற்பட்டு விட்டது.

இதனால், பன்னாட்டு மன்றத்தின் இடைநடுவராக இருந்த ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த போல்க் பெர்னதத் என்ற அதிகாரியை ஜெருசலேம் நகரில் வைத்து ஒரு யூத தீவிரவாத இயக்கம் சுட்டுக் கொன்றது. இப்படி குண்டுவைப்பதும், சுட்டுக்கொல்வதும் பயங்கரவாதம் இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். ஆமாங்க. மற்றவர்கள் இப்படிச் செய்தால் அவர்கள் பயங்கரவாதிகள். யூதர்கள் செய்தால் அவர்கள் தேசப் பக்தர்கள், விடுதலை விரும்பிகள்.

1948ஆம் ஆண்டு, மே 15ஆம் திகதி இஸ்ரேல் என்ற நாடு உருவாக்கப்பட்டதாக பிர-கடனம் செய்யப்பட்டது. இஸ்ரேல் உருவான போது, 'நான் கடவுள் நம்பிக்கை இல்லாதவன். ஆனால் இந்த நாடு எங்களுக்குக் கடவுள் தந்தது' என்று டேவிட் பென்குரியன் திருவாய் மொழிந்தார். (கடவுள் எப்பப்பா ரியல் எஸ்டேட் ஏஜெண்ட் ஆனார்?) இஸ்ரேல் நாடு உருவான இரண்டொரு வாரங்களில் அண்டை அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் போர் வெடித்து விட்டது.

காஸாபகுதியும்,யோர்தானின்மேற்குக் கரை பகுதியும் முழுக்க முழுக்க பாலஸ்தீனர்கள் வாழும் பகுதிகள். இந்தநிலையில் போர் தொடங்கியதும், ஜெருசலேம் நகரம் உள்பட ஒட்டு மொத்த மேற்குக்கரைப் பகுதியையும் இஸ்ரேல் விழுங்கிக் கொண்டது. காஸாபகுதி இஸ்ரேலிய கடற்படையின் முற்றுகையில் சிக்கியது.

என்ஜெடி பாலைவனப் பசுஞ்சோலை, சாக்கடலின் தென்மேற்குக் கரை எல்லாம் இஸ்ரேலின் பிடியில் வந்துவிட்டது. இஸ்ரேல் உருவானபோது, பன்னாட்டு மன்ற பொதுச்செயலாளராக இருந்த நோர்வே நாட்டின் திர்க்விலி, இஸ்ரேலுக்குஒதுக்கியது55விழுக்காடு பரப்பளவுதான். ஆனால் முதல்போரில் பாலஸ்தீனத்தின் 80 விழுக்காடு பகுதியை இஸ்ரேல் விழுங்கிக் கொண்டது.

இந்தப்போரின்போது இஸ்ரேலின் முதல் பிரதமராக மாறியிருந்த டேவிட் பென் குரியன், அல்டாலனாஎன்றகப்பலைமூழ்கடிக்க உத்தரவிட்டார். இந்த அல்டாலனா கப்பல், அரேபியர்களுக்குச் சொந்தமான கப்பல் என்று நீங்கள் நினைத்திருந்தால் தவறு. அது இர்குன் என்ற யூத தீவிரவாத இயக்கத்துக்குச் சொந்தமானது.

இர்குன் இயக்கம், இஸ்ரேல் என்ற நாட்டை ஏற்காததால் அவர்கள் யூதர்கள் என்றாலும் அவர்களது கப்பலை மூழ்கடிக்க பென் குரியன் உத்தரவிட்டார். என்ன ஒரு தயாள சிந்தனை பாருங்கள்.

சகோதர யூத இயக்கம் ஒன்றுக்கே இவ்வளவு சலுகை காட்டிய பெருமகன், அரபு சகோதரர்கள் விஷயத்தில் எப்படி நடந்து கொண்டிருப்பார்? பாலஸ்தீன மக்களை பாலஸ்தீனத்தில் இருந்து விரட்டியடிக்க தாலெத் (Dalet) என்ற மறைமுகத் திட்டத்தை இஸ்ரேல் நாடு வகுத்திருந்தது. மிர்ட்ஸா நிகோயோன் (Mirtza Nikoyon) அதாவது இன சுத்திகரிப்பு என்றும் அது அழைக்கப்பட்டது.

1948ல் நடந்த போருக்கு அடுத்த ஆண்டு ஜெரிக்கோ நகரம், ஹெப்ரான் பகுதிகளை இஸ்ரேல் திருடிக்கொண்டது. இப்படியாக 78 விழுக்காடு அரபு மொழி பேசும் மக்கள் வாழ்ந்த பாலஸ்தீனப் பகுதியில் ஒட்டிக் கொண்டு உருவான இஸ்ரேல், கொஞ்சம் கொஞ்சமாக வீங்கி வெடிக்க ஆரம்பித்தது.

ஒட்டகம் முதலில் கூடாரத்துக்குள் மூக்கை நுழைத்தது. பின்னர் முதுகை உள்ளே புகுத்தியது. முடிவில் அது அரேபியனை வெளியே தள்ளி கூடாரத்தைத் தனதாக்கிக் கொண்டது.

கூடாரத்தில் ஒட்டகத்துக்கு இடம் கொடுத்த அரேபியனின் கதை உண்மையில் கதையல்ல. பாலஸ்தீனத்தில் நடந்த நிஜமான வரலாறு அது

இஸ்ரேல், 280 மைல் நீளமும், 85 மைல் அகலமும் கொண்ட நாடு. அதன் வடமுனை தென் முனை வழியாக 7 மணிநேரத்தில் இஸ்ரேலைக் கடந்து விடலாம். அதுவே கிழக்கு மேற்காக என்றால் 90 நிமிடங்களில் கடந்து போய் விடலாம்.

இந்த இஸ்ரேல்தான் பபுள்கம் முட்டை அளவுக்கு இருந்து பலூன் சைசுக்கு விரிய ஆரம்பித்தது.


இஸ்ரேல், முட்டையில் இருந்து குஞ்சாக வெளிவந்து கண்விழித்தபோது அதைக் கண்டு பரிதாபப்பட்டவர்கள் பலர். இத்தனை அரபு நாடுகளுக்கு இடையிலே இவ்வளவு குட்டியூண்டு நாடாக இஸ்ரேல் பிறந்திருக்கிறதே, இது எப்படி பிழைக்கப் போகிறது என்று பலர் கவலைப் பட்டார்கள். இஸ்ரேல் நாடு உருவானபோது அதை முந்தியடித்துக் கொண்டு அங்கீகரித்த நாடுகளில் சோவியத் ரஷ்யாவும் ஒன்று.




11ஆம் பக்கம் பார்க்க...



# பிராந்தியச் செய்திகள்



## பயணத்தடை அமுலில் உள்ள நிலையில் யாழில் வீடு புகுந்து தாக்குதல்

யாழ்ப்பாணம் புதிய செம்மணி வீதியில் உள்ள வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்த கும்பல், வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதுடன், வீட்டின் பொருட்களையும் சேதப்படுத்தி தப்பிச் சென்றுள்ளது.

மேலும் குறித்த குழுவினர் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொறுக்கியும் மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி உள்ளிட்டவற்றையும் சேதப்பட்டுத்திச் சென்றுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் பயண தடை அமுலில் உள்ள நிலையில் அன்று (சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது

இந்த தாக்குதலில் வீட்டில் இருந்த மூன்று பேர் காயமடைந்துள்ளதாகவும் வீட்டிலிருந்த இளைஞர் ஒருவரின் தங்க சங்கிலி ஒன்றையும் கொள்ளையடித்து சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 20 க்கும் மேற்பட்டவர்கள் உள்ளடங்கிய குழு மோட்டார் சைக்கிள்களில் வந்து இவ்வாறு தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





## இஸ்ரேல் - பாலஸ்தீன மோதல்: இஷ்ரேலில் உள்ள இலங்கையர்களுக்கான அறிவிப்பு

இஷ்ரேலில் உள்ள இலங்கையர்கள் அனைவரையும் விழிப்புடன் இருக்குமாறும் பெரிய கூட்டங்கள் மற்றும் தேவையற்ற பயணங்களையும் தவிர்க்குமாறு டெல் அவிவில் (**Tel Aviv**) உள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

காசா பகுதியில் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையிலான கலவரங்கள் மற்றும் மோதல்களால் அதிகரித்து வரும் நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தீவிர அவசரநிலை ஏற்பட்டால் இலங்கை சமூகத்தின் தேவைகளுக்கு பதிலளிக்கும் பொருட்டு தூதரகம் துரித எண்களையும் அறிமுகப்படுத்தியது.

அதன்படி, இலங்கையர்கள் கே.பி. சந்திரதிலகே, 058 6875764 அல்லது இண்டிகா சேனரத்ன, தொழிலாளர் மற்றும் நலன்புரி 055 9284399 ஆகிய எண்களுடன் தொடர்புகொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.



## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி களியாட்ட நிகழ்வில் கலந்துகொண்ட 7 பேர் கைது

ராஜகிரிய பகுதியில் களியாட்ட நிகழ்வொன்றில் கலந்துகொண்ட இரு பெண்கள் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இவர்கள் கைத செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதன்போது குறித்த நபர்களிடம் இருந்து மதுபானம் மற்றும் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## வவுனியாவில் மற்றுமொரு இடம் தொல்லியல் திணைக்களம் வசம் - பௌத்த அடையாளம் உள்ளதாம்!!

வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மன்னகுளம் பகுதியில் பெத்த வழிபாடு இடம்பெற்றமைக்கான சான்றுகள் உள்ளதாக தொல்லியல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

பழைய செங்கல் இடிபாடுகளுடன் கூடிய பௌத்த வழிபாட்டு அடையாளங்கள் குறித்த பகுதியில் இருப்பதாக தொல்லியல் திணைக்களம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) தெரிவித்துள்ளது.

வவுனியா வடக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்டப்பட்ட **225-B** கிராம அலுவலர் பிரிவில் மன்னகுளம் பகுதியில் தொல்பொருள் சின்னங்கள் கொண்ட தளமொன்று உள்ளதாக சிங்க ரெஜிமென்டின் 16ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி தொல்பொருள் திணைக்களத்திற்கு அறிவித்திருந்தார்.

இதையடுத்து, வவுனியா தொல்பொருள் அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவினரால் அங்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த பகுதியில் 60-70 சென்றிமீற்றர் உயரத்திற்கு இடைப்பட்ட 12 கற் தூண்களைக் கொண்ட கட்டட அமைப்பும் இருப்பதாகவும் அதில், சிங்கள எழுத்துக்களால் பூசை தொடர்பாக எழுதப்பட்டுள்ளதாகவும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அத்துடன், இந்த தொல்பொருள் அடையாளம் கி.மு எட்டு மற்றும் ஒன்பதாம் நூற்றாண்டுகளுக்கு உரியது எனவும், அங்கு பழைய கட்டடங்களுக்கான செங்கல், ஓடுகள் இருப்பதாகவும் தெரிவித்துள்ள குறித்த திணைக்களத்தினர், இக்கட்டடம் 50 சதுரமீற்றர் பரப்பளவைக் கொண்டதாக இருந்திருக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, வவுனியா வடக்கில் வெடுக்குநாறி மலை, கோடலிபறிச்சான் பகுதியைச் தொடர்ந்து தற்போது, மன்னகுளம் பகுதியையும் தொல்லியல் திணைக்களத்தினர் உரிமை கோரியிருப்பது குறிப்பிடத்தக்கது.



## முல்லைத்தீவு ஆடைத் தொழிற்சாலையில் 20 பேருக்கு கொரோனா!

வடக்கு மாகாணத்தில் மேலும் 55 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) 642 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒன்பது பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 20 பேருக்கும் கிளிநொச்சியில் எட்டுப் பேருக்கும் வவுனியாவில் 11 பேருக்கும் மன்னார் மாவட்டத்தில் ஏழு பேருக்கும் கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில், யாழ். போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் இருந்த மூவருக்கும் பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவருக்கும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவருக்கும் ஊர்காவற்றுறை, சாவகச்சேரி மற்றும் சங்கானை பிரதேச சுகாதார அதிகாரி பிரிவுகளில் தலா ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.



அத்துடன், முல்லைத்தீவு வைத்தியசாலையில் எட்டுப் பேருக்கும் புதுக்குடியிருப்பு சுகாதாரப் பிரிவில் ஆடைத் தொழிற்சாலையைச் சேர்ந்தவர்கள் 12 பேருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மேலும், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஐவருக்கும் பளை சுகாதாரப் பிரிவில் மூவருக்கும் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன், வவுனியாவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் ஆறு பேர் உட்பட 11 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. மேலும், மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஏழு பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.




## பாக்கியலட்சுமி சீரியல் நடிகரை திருமணம் செய்யும் செம்பருத்தி சீரியல் நடிகை ஷபானா!

ஜீ தமிழ் தொலைக்காட்சியில் கடந்த நான்கு வருடங்களாக வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் சீரியல் செம்பருத்தி. இதில் கதாநாயகியாக அறிமுகமானவர் தான் இளம் சின்னத்திரை நடிகை ஷபானா. இந்த செம்பருத்தி சீரியல் மூலம் தமிழ் ரசிகர்கள் மத்தியில் அறிமுகமாகி,அவர் மனதில் இருந்து நீங்கா இடத்தையும் பிடித்துள்ளார் ஷபானா.

இந்நிலையில் நடிகை ஷபானா, பாக்கியலட்சுமி சீரியல் நடிகர் ஆர்யன் என்பவரை காதலித்து வருவதாக தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. இதில் ரசிகர் ஒருவர் ஆர்யனிடம் திருமணம் குறித்து பேசியுள்ளார். அதற்கு ஆர்யன் என்பவர் ஷாபனாவை குறிப்பிட்டு ' நான் இவங்களுக்கு என்ன சொல்லவது ' என கூறியுள்ளார்.

இதற்கு நடிகை ஷபானா 'என்னுடையது' என ஆர்யன் கூறியதற்கு ரீப்ளே செய்துள்ளார். இதனை பார்த்த ரசிகர்கள் பலரும் ஷபானா இவரை காதலித்து வருகிறார் என உறுதி செய்து சமூக வலைத்தளத்தில் கூறி வருகின்றனர். ஆனால் இதுகுறித்து இதுவரை அதிகாரப்பூர்வமாக ஷபானா தெரிவிக்கவில்லை.






## சத்யா சீரியல் நடிகை ஆயிஷாவின் நிஜ குடும்பம்

விஜய் டிவியில் ஒளிபரப்பான பொன்மகள் வந்தால் சீரியல் மூலம் சின்னத்திரையில் நடிகையாக அறிமுகமானவர் நடிகை ஆயிஷா. இதனை தொடர்ந்து ஜீ தமிழ் தொலைக்காட்சியில் சத்யா எனும் மிரட்டலான சீரியல் மூலம் மீண்டும் கதாநாயகியாக வந்தார். தற்போது ஜீ தமிழில் ஒளிபரப்பாகி வரும் முன்னணி சீரியல்களில் ஆயிஷாவின் சத்யா சீரியலும் இடம்பிடித்துள்ளது.

இந்நிலையில் நடிகை ஆயீஷா தனது அம்மா மற்றும் குடும்பத்தினருடன் எடுத்துக்கொண்ட அழகிய புகைப்படம் வெளியாகியுள்ளது. ஆம் முதல் முறையாக ஆயிஷாவின் குடும்பத்தை பார்த்த ரசிகர்கள் பலரும் ஆயிஷாவின் குடும்பமா இது! அழகிய பேமிலி போட்டோ, என கூறி வருகின்றனர்.



## லொக்டவுனில் காதலனுடன் இருக்கும் நடிகை ஸ்ருதி ஹாசன்



தென்னிந்திய திரையுலகில் நடிகை ஸ்ருதி ஹாசன் முன்னணி கதாநாயகிகளில் ஒருவராக ரசிகர்களால் கொண்டாடப்படுகிறார். தற்போது தமிழில் மறைந்த எஸ்.பி ஜனநாதன் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடிப்பில் உருவாகியுள்ள, லாபம் திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்துள்ளார்.

ஸ்ருதி ஹாசன் வெளிநாட்டு நபர் ஒருவரை சில ஆண்டுகளுக்கு முன் காதலித்து வந்தார். ஆனால் அந்த காதல் அவருக்கு கைகூடவில்லை. மீண்டும் தற்போது நடிகை ஸ்ருதி ஹாசன் **Santanu Hazarika** என்பவரை காதலித்து வருவதாக தகவல்கள் கூறப்படுகிறது. இந்நிலையில் இந்த லாக்டவுன் நேரத்தில் தனது புதிய காதலன் **Santanu Hazarika**வுடன் கழித்து வருகிறார் ஸ்ருதி. ஆம் அவருடன் நெருக்கமாக இருக்கும் ஸ்ருதி ஹாசனின் லேட்டஸ்ட் புகைப்படங்கள் தற்போது வெளியாகி, கோலிவுட் வட்டாரத்தில் வைரலாகி வருகிறது.

## விஜய் எடுத்த அழகிய குடும்ப புகைப்படம்

நடிகர் விஜய் தமிழ் சினிமாவே கொண்டாடும் ஒரு பெரிய நடிகர். அவர் இப்போது தனது 65வது படத்தில் பிஸியாக நடித்து வந்தார்.

முதற்கட்ட படப்பிடிப்பிற்காக படக்குழு ஜார்ஜியா சென்றார்கள். அடுத்த படப்பிடிப்பிற்காக சென்னையில் பெரிய மால் செட் போடப்பட்டது. ஆனால் கொரோனா தொற்று அதிகரித்து வருவதால் விஜய் படப்பிடிப்பு வேலைகளை முழுவதும் நிறுத்த கூறியுள்ளாராம்.

பிரச்சனைகள் முடிந்த பிறகு மொத்தமாக தனது திகதியை கொடுக்கிறேன் இப்போதைக்கு படப்பிடிப்பு வேண்டாம் என விஜய் தயாரிப்பு குழுவிடம் கூறியிருக்கிறாராம்.

இந்த நிலையில் விஜய்யின் அழகிய குடும்ப புகைப்படம் ஒன்று வைரலாகி வருகிறது. அவர் அம்மா, அப்பா, மனைவி, மகன், மகள் என அனைவருடனும் நின்று கேக் வெட்டுவது போல் புகைப்படத்தை ஒரு ரசிகர் எடிட் செய்துள்ளார்.



தொகுப்பு :– ஹாசினி




## முகம் பளிச்சிட சில பயனுள்ள அழகு குறிப்புகள்...!

மஞ்சளில் இருக்கக்கூடிய ஆண்ட்டிசெப்டிக் துகள்கள் சருமத்தில் ஏற்படக்கூடிய அலர்ஜிகளிலிருந்து நம்மை காத்திடும். வெள்ளரியை பேஸ்ட்டாக்கிக் கொள்ளுங்கள் அத்துடன் ஒரு ஸ்பூன் மஞ்சள் தூளை சேர்த்து நன்றாக கலக்கி முகத்தில் ஃபேஸ் மாஸ்க்காக போட வேண்டும். நன்றாக காய்ந்ததும் கழுவி விடலாம்.



கற்றாழையில் இருக்கும் சத்துக்கள் சருமத்தை ஃப்ரெஸ்ஸாக வைத்திருக்க உதவுகிறது. வெள்ளரிச்சாறுடன் கற்றாழை ஜெல் கலந்து தினமும் இரவு படுப்பதற்கு முன்னால் தடவிக் கொள்ளுங்கள். அரை மணி நேரம் கழித்து கழுவி விடலாம். இது சருமத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் மட்டுமல்ல சரும சுருக்கங்கள் ஏற்படாமலும் தடுத்திடும்.

உலர்ந்த ரோஜா இதழ்களுடன் சிறிது பன்னீரும் சந்தனமும் அரைத்து முகத்தில் தடவ தோலின் நிறம் பொலிவு பெறும். பால், கடலை மாவு, மஞ்சள், சந்தனம், அனைத்தையும் கலந்து முகத்தில் தடவி குளித்தால் சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாறும்.

வேப்பிலையும், வெள்ளரியும் முதலில் ஒன்றாக அரைத்துக் கொள்ளுங்கள். ஓட்ஸ் தனியாக அரைத்துக் கொள்ளுங்கள். பின்னரத்துடன் ஒரு ஸ்பூன் மஞ்சள் தூள் மற்றும் இரண்டு ஸ்பூன் ஓட்ஸ் பவுடர் சேர்த்து தேவையான அளவு தண்ணீர் சேர்த்து நன்றாக கலக்க வேண்டும். அதனை முகத்தில் தடவி ஸ்க்ரப் செய்து வந்தால், உங்கள் முகம் பளிச் பளிச்தான்.

## தலைமுடி சார்ந்த அத்தனை பிரச்சனைகளும் சுலபமாக தீரவேண்டுமா...?

தேங்காய் எண்ணெய் மிக நெடுங்காலமாகவே நமது சமையல் மற்றும் சித்த, ஆயுர்வேத மருத்துவ முறைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதய ஆரோக்கியத்திற்கு தேங்காய் எண்ணெய்யில் சமைக்கப்பட்ட உணவுகள் பேருதவி புரிகிறது.

தேங்காய் எண்ணெய்யில் சருமத்தை மிருதுவாக்கும் மற்றும் சுருக்கங்களை போக்கும் ஆன்டி ஆக்சிடண்ட்கள் ஆதிக்கம் நிறைந்திருக்கின்றன. மேலும் கோடைகாலங்களில் தேங்காய் எண்ணெய்யை மேற்புற தோலில் பூசி கொள்வதால் சூரியனின் சுட்டெரிக்கும் வெப்பத்திலிருந்து தோலை பாதுகாக்கலாம்.

ரத்த காயங்களில் அடிக்கடி நீர் படுவதை தவிர்க்க வேண்டியிருக்கிறது. இதற்கு நிவாரணமாக அக்காயங்களில் தேங்காய் எண்ணெய்யை நன்கு தடவுவதன் மூலம் நீர் புகாமல் பாதுகாப்பு ஏற்படுவதோடு, அப்புண்கள் மற்றும் காயங்களை வேகமாக ஆற்றவும் உதவுகிறது.

தேங்காய் எண்ணெய் பயன்படுத்தி செய்யப்பட்ட உணவுகளை அடிக்கடி சாப்பிட்டு வருபவர்களுக்கு சிறுநீரகங்களில் கற்கள் ஏற்படும் வாய்ப்புகள் வெகுவாக குறைகிறது.

தேங்காய் எண்ணெய் கூந்தலின் உச்சந்தலையில் வறட்சியை நீக்குகிறது. இந்த பிரச்சனை மறைந்துவிடும். உங்கள் தலைமுடியை தேங்காய் எண்ணெய்யுடன் வாரத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை மசாஜ் செய்யுங்கள்.

தினந்தோறும் தலைக்கு சுத்தமான தேங்காய் எண்ணெயை தேய்த்து வருவதன் மூலம் தலை முடி சார்ந்த அத்தனை பிரச்சனைகளும் சுலபமாக தீரும்.

வயிறு மற்றும் குடல்களில் ஏற்பட்டும் அல்சர், குடல்களில் தங்கியிருக்கும் நுண்ணுயிரிகள், நச்சுக்கள், மலச்சிக்கல், அஜீரணம் போன்றவை விரைவில் நீங்க தேங்காய் எண்ணெய் கொண்டு செய்யப்பட்ட உணவுகளை தொடர்ந்து சாப்பிடு வருவதன் மூலம் சிறந்த நிவாரணம் பெற முடியும்.



## எளிதில் கிடைக்கும் முருங்கைக்காயில் இத்தனை சத்துக்களா....?



முருங்கைக் காய் மலச்சிக்கல், வயிற்றுப் புண், கண் சம்பந்தமான நோய்களுக்கு மருந்தாக பயன்படுகிறது. முருங்கைக் காய் உடலுக்கு நல்ல வலுவைக் கொடுக்கும். இதை சாப்பிட்டால் சிறுநீரகம் பலப்படும், தாது உற்பத்தி அதிகரிக்கும்.

வாரத்தில் குறைந்தது இரண்டு முறை முருங்கைக் காயை உணவாக எடுத்துகொண்டால் ரத்தமும், சிறுநீரும் சுத்தம் அடையும். கணையம், கல்லீரலில் வீக்கம் உள்ளவர்கள் முருங்கைக்காயை சாப்பிட்டால் நல்ல நிவாரணம் கிடைக்கும்.

குழந்தைகள் முருங்கைக்காய் விதைகளை சாப்பிட்டால் மலக்குடல்களில் இருக்கும் கிருமி பூச்சிகள் வெளியேறும். முருங்கைக்காயில் ஜிங்க் சத்து அதிகம் காணப்படுகிறது.

முருங்கைக்காயை தொடர்ந்து சாப்பிடும் ஆண்களுக்கு பாலுணர்ச்சி தூ ண்டப்படுவதோடு, விறைப்புத்தன்மை, விரைவில் விந்து வெளியேறுதல், மலட்டுத்தன்மை குறைபாடு போன்ற பிரச்சனைகள் நிவர்த்தியாகின்றன.

முருங்கைக்காயானது தொண்டை கரகரப்பு, சளி மற்றும் தொண்டை புண் ஆகியவற்றைகுணப்படுத்துகிறது. முருங்கைக்காய் தோல் புற்றுநோய், கல்லீரல் புற்றுநோய் மற்றும் புரோஸ்ட்ரேட் புற்றுநோய் ஏற்படாமல் தடுக்கும் வல்லமை கொண்டது.

முருங்கைகாயில் செரோடோனின், டோபமைன் மற்றும் நோரர்டேன்லைன் போன்றவை உள்ளன. இவை நினைவாற்றல், மனநிலை மற்றும் உடலுறுப்புகளின் ஆரோக்கியத்தை அதிகரிக்கிறது.

**தொகுப்பு :- ஹாசினி**

07ஆம் பக்க தொடர்ச்சி...



யூதர்கள் 'கிப்புட்ஸ்' என்ற பண்ணைமுறையை வைத்திருந்த தால் இஸ்ரேல் ஒரு கம்யூனிச நாடாகி விடும் என்று அப்போதைய ரஷிய அதிபர் ஜோசப் ஸ்டாலின் ஒரு (தப்புக்) கணக்கு போட்டிருந்தார்.

இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையே முதல்போர் வெடித்தபோது இரண்டாம் உலகப் போர்காலத்து ஆயுதங்களை வேறு ஸ்டாலின், இஸ்ரேலுக்கு அள்ளித்தந்தார். பிறகு இஸ்ரேலின் உண்மை முகம் இதுதான் என்று தெரிய வந்தபோது ஜோசப் ஸ்டாலின் அப்படியே அதிர்ந்து போனார்.

அவ்வளவுபெரியஹிட்லரையேபோட்டு பொள பொள என்று பொளந்தவர் ஜோசப் ஸ்டாலின். ஆக, அந்த ஜோசப் ஸ்டாலினுக்கே வெகு இலாக வகமாக விபூதியடித்தவர்கள்தான் இஸ்ரேலியர்கள்.

இஸ்ரேல் நாடு உருவான புதிதிலேயே அண்டை அரபுநாடுகளில் அதன் வேலையைக் காட்ட ஆரம்பித்தது. சிரியா நாட்டில் அமெரிக்க உளவுப்படையான சி.ஐ.ஏ.யின் உதவியுடன் ஒரு ராணுவப்புரட்சி நடத்தப்பட்டது. இஸ்ரேலுக்கு வேண்டப்பட்டவரான ஹோஸ்னி செய்ம் என்பவர் சிரியாவின் தலைவராக்கப்பட்டார்.

மற்றொரு அண்டை நாடான ஜோர்டானின் மன்னராக இருந்தவர் அப்துல்லா. அவருக்கு பாலஸ்தீன மக்கள் தனது கொடியின் கீழ், அம்மான் நகரை தலைநகரமாய் கொண்ட ஜோர்டான் நாட்டுக்கு அடிபணிந்து வாழ வேண்டும் என்று நீண்டநாளாக ஆசை.

அப்துல்லாவின் இந்த அடாத ஆசையை சரியாகப் பயன்படுத்திக் கொண்டார் இஸ்ரேலிய பிரதமர் பென் குரியன். அப்துல்லாவுடன் அவர் ஒரு ரகசிய ஒப்பந்தம் போட்டுக் கொண்டார்.

பாலஸ்தீனத்தை தனதாக்க வேண்டும் என்றஆசைகாரணமாகஒருகட்டத்தில் பாலஸ்தீன மன்னராக, நமக்கு நாமே திட்டம் மாதிரி, தனக்குத்தானே முடிசூட்டிக் கொண்டார் அப்துல்லா.

**இஸ்ரேல் என்ற எதிரி ஒருபக்கம் இருக்க, அப்துல்லா என்ற துரோகியையும் இப்போது எதிர் கொண்டார்கள் பாலஸ்தீனர்கள்.**

1951ஆம் ஆண்டு, ஜெருசலேம் நகரில் உள்ள அல் அக்சா மசூதிக்கு மன்னர் அப்துல்லா தொழுகைக்கு வந்திருந்த நேரம். முஸ்தபா சுக்ரி என்ற தையல்காரர், மசூதியின் தலை வாசலுக்குப் பின்னால் மறைந்திருந்து மன்னர் அப்துல்லாவைத் தீர்த்துக் கட்டி விட்டார்.

பதிலுக்கு மன்னரின் பாதுகாவலர்கள் முஸ்தபா சுக்ரியை அதே இடத்தில் சுட்டுக்கொன்று விட்டார்கள். தையல்காரர் முஸ்தபா சுக்ரி, இஸ்ரேல் உருவானபோது நடந்த முதல் போரில், ஜெருசலேம் நகரை மீட்க அரபுப் படைகளுடன் சேர்ந்து போரிட்டவர் என்பது பின்னர் தெரிய வந்தது.

இஸ்ரேல் நாடு உருவாவதற்கு முன்பே யூத தலைர்கள் பலர் 'அகண்ட இஸ்ரேல்'என்றுஒருகனவுத்திட்டத்தை கைக்குள் வைத்திருந்தார்கள். அதாவது எவ்வளவு முடியுமோ அவ்வளவு இஸ்ரேலின் எல்லைகளை விரிவுபடுத்த வேண்டும் என்பதுதான் அகண்ட இஸ்ரேல் திட்டம்.

எடுத்துக்காட்டாக மாக்ஸ் நோர்ட்டோ என்ற யூத தலைவர் எழுதிவைத்திருந்த தகவலை இங்கே சொல்லி விடுவோம். 'பாலஸ்தீனத்துக்குப் போய் அங்கே நமது எல்லைகளை யூப்ரடிஸ் நதி வரை விரிவுபடுத்துவோம்' என்பதுதான் அவர் எழுதிவைத்த வாசகம். ஒரு வாசகமானாலும் திருவாசகம்.

யூப்ரடிஸ் ஆறு, இராக் நாட்டில் ஓடுகிறது. அதாவது இராக் நாடு வரை இஸ்ரேலை இவருக்கு விரிவுபடுத்த வேண்டுமாம். (ஆசையைப் பாருங்கள்!). இதற்கிடையே எகிப்து நாட்டின் மா பெரும் தலைவராக உருவாகியிருந்தார் கமால் அப்துல் நாசர்.

எகிப்து நாட்டின் நீண்டநெடிய வரலாற்றில் எகிப்தியர்கள் யாரும் எகிப்துக்கு தலைவராக இருந்ததில்லை. (அங்கேயுமா?) நெக்டானிபோ என்ற பாரோ மன்னருக்குப்பிறகு எகிப்தை ஆள வந்த முதல் எகிப்தியர் நாசர்தான். அவருக்கு முன்பு, எகிப்தை கடைசியாக ஆண்ட பாரூக் மன்னர் அல்பேனியா நாட்டுக்காரர். (எகிப்திய அரசி கிளியோபாட்ரா கிரேக்க நாட்டுப் பெண்) நைல் நதிக்கு குறுக்கே அஸ்வான் என்ற அணையைக் கட்டி நாட்டை வளமாக்க வேண்டும் என்பது நாசரின் கனவுகளில் ஒன்று. கனவு சரி. அதற்கு காசு வேண்டுமே? அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளிடம் நிதியுதவி கேட்டார் நாசர். (கடனாகத்தான்).

ஆரம்பத்தில் நிதி தருவதாகச் சொன்ன அமெரிக்காவும், இங்கிலாந்தும் பிறகு திடீரென என்ன நினைத்ததோ? கைவிரித்து விட்டன.

'பங்காளி. அவனுக்கு பத்து டாலர் கூட குடுக்காதே. அவன் ஆபத்தானவன்' என்று இஸ்ரேல் சொல்லியிருக்க வேண்டும்.

நாசரின் பார்வை இப்போது எகிப்தில் இருந்த சுயஸ் கால்வாயின் மீது விழுந்தது. சுயஸ் கால்வாய் எகிப்திய மண்ணில் இருந்தாலும், அதன்மூலம் வரும் வருவாயில் பெரும்பகுதியை இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகள் தான் அனுபவித்து வந்தன. 'அணைகட்ட பணம் தர மாட்டேன்ங்கிறாங்க. பேசாம சுயஸ் கால்வாயை தேசிய உடைமையாக்கிக் கொண்டால் என்ன? அதன்மூலம் பணம் வருமே. அதில் அணை கட்டலாமே?' என்று யோசித்தார் நாசர்.

1956ஆம்ஆண்டு,'சுயஸ்கால்வாய்இனி எகிப்துக்கு மட்டுமே சொந்தம்' என்று அறிவித்தார் நாசர். அவ்வளவுதான் வெடித்தது சுயஸ் போர்!

**நியாயமாகப் பார்த்தால் சுயஸ் கால்வாயை எகிப்து சொந்தமாக்கினால் இங்கிலாந்து, பிரான்ஸ்நாடுகளுக்குத்தான் கோபம் வர வேண்டும். ஆனால் இங்கே இஸ்ரேலுக்குத்தான் முதலில் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.**

எகிப்து மீது இஸ்ரேல் போர் தொடுக்க, அதன்பிறகு இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகளும்எகிப்துக்குஎதிராக களத்தில் இறங்கின.

போர் தொடங்கிய 100 மணிநேரத்தில் எகிப்தின் சினாய் தீபகற்பத்தை இஸ்ரேல் கைப்பற்றியது. பாலஸ்தீனர்களின் காசா பகுதியையும் இஸ்ரேல் கபளீகரம் செய்தது. எகிப்தின் போர்ட் செயித் துறை முகம் போன்ற பகுதிகளும் எதிரிகளின் கையில் சிக்கின.

இப்போது உங்களுக்கு ஒன்று புரிந்து போயிருக்கும். கிடைக்கிற வாய்ப்புகளைப் பயன்படுத்தி எல்லைகளை விரிவாக்க வேண்டும் என்பதுதான் இஸ்ரேலின் திட்டம்.

இந்தநிலையில், இஸ்ரேலைப் பற்றி சில அரபுத் தலைவர்கள் அடித்த கமெண்ட்களையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த கமெண்ட்கள் வருமாறு:

**'இஸ்ரேல் நாடு, இஸ்லாமிய உலகு என்ற உடலில் தோன்றிவிட்ட நாற்றம்மிகுந்த, சீழ்பிடித்த கட்டி. அதை வெட்டி அகற்ற வேண்டும்'**

**'இஸ்ரேல், குடிபுகுந்த மக்கள் மட்டுமே நிறைந்த ஒரு போலியான நாடு. இங்கே உள்ள யூதர்கள் அவரவர் வாழ்ந்து நாடுகளுக்குத் திரும்பிப் போயாக வேண்டும்'**

**'இஸ்ரேல் என்ற நாடே இந்தப்பகுதியில் இருக்கக் கூடாது. இஸ்ரேலை பனிபடர்ந்த அலாஸ்கா பகுதிக்கு மாற்ற வேண்டும்'**

**''இஸ்ரேல், மேற்கு ஆசியாவில் அமெரிக்காவால் பணிக்கு அமர்த்தப்பட்ட ஒரு பொலீஸ்காரன்'**

**'ஹிட்லர் ஜேர்மன் நாட்டுக்காரர். ஹிட்லர் யூதர்களைக் கொடுமைப்படுத்தியிருந்தால் ஜேர்மன் நாட்டின் ஒரு பகுதியில் இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்குங்கள். அதை விட்டுவிட்டு எங்களுக்குப் பக்கத்தில் இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்கி ஏன் எங்கள் தாலியை அறுக்கிறீர்கள்? தப்பு செய்தவன் ஜேர்மன்காரன். தண்டனை அனுபவிப்பது நாங்களா?'**

**இப்படி எல்லாம் அரபுத் தலைவர்கள் இஸ்ரேலுக்கு வாழ்த்துரை வழங்கியிருந்தார்கள்.**

**இவை எல்லாவற்றையும் விட அரபுத் தலைவர் ஒருவர் இஸ்ரேல் பற்றி சொன்ன வர்ணனை கொஞ்சம் ஒருமாதிரியானது. அவர் சொன்ன அந்த வர்ணனை. 'இஸ்ரேல் என்பது இடம்மாற்றி நடப்பட்ட மயிர்!'**

**தகவல் – இணையம்**

# பெண்களும் உளவியல் முரண்பாடுகளும்

கடந்தவார தொடர்ச்சி...



குறைந் ஊதியத்தில் கூடிய உழைப்பு, என சிறு முதலாளிமார்கள் அவர்களைச் சுரண்டி அவர்களின் உடல் வலு - கட்டு - குறைந்தவுடன், நடுத்தெருவில் வீடுகின்றனர். இதனால், அவர்கள் உடல் - உள நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றனர். சிலர் வழித்தடுமாறி பாலியல் தொழிலுக்கும் விழுகின்றனர் கட்டாயம் இழுக்கப்படுகின்றனர்.

மறுபக்கத்தில் இலங்கையில் பெண்கள் பொதுவாக கல்வியில், கலைகளில், காவற்துறை, வைத்தியத்றை, நிதித்துறை, விஞ்ஞானத்துறை, சட்டத்துறை, தொழில்நுட்பத்துறை, நீதித்துறை, விளையாட்டுத்துறைஎனஅனைத்து துறைகளிலும் பெண்கள் ஆணுக்கு நிகராக சிறந்து விளங்கினாலும் வடக்கு மாகாணத்தில் சிசுக்கொலை, கற்பழிப்பு பாலியல் வன்முறைகள் ஒழிந்தபாடில்லை. இதற்கு கருத்தியல் - உளவியல் - ரீதியான மாற்றம் வேண்டும். இல்லாவிடின் மாறாது.

தற்போது வடக்கு மாகாணத்தில் விஸ்திர்க்கப்பட்டுள் சிக்கல் விபசார விடுதிகளில் இளைஞர் - யுவதிகள் உல்லாசமாக இருத்தல் ஆகும். இதில் ஈடுபடும் இளைஞர்களில் அதிகமானோர் ஏற்கனவே திருமணமானவர்கள். ஆனால், யுவதிகளில் அநேகர் திருமணமாகாதவர்கள். இதற்கு பெண்கள் எதிர் கொள்ளும் பொருளாதார நெருக்கடியும் ஒரு காரணமாக உள்ள போதும், ஆடம்பரத்தேவையும் நவீன தொழில்நுட்ப வசதிகளும் தொலைக்காட்சி நாடகங்களும், விளம்பரங்களும் முக்கியமான பங்காற்றுகின்றன..

தமிழ் அரசியல் அடிவருடி-களும் கட்சி உறுப்பினர்களும் காலந்தோறும் வடக்கில் பெண்களை இனவாதத் தீ-யக் கக்கி பெண்களை நசுக்கியே வந்துள்ளனர். முன்னாள் பெண் போராளிகளின் வாழ்வாதாரம் மிகவும் கீழ் நிலையில் உள்ளமையை மாற்றியமைப்பதற்கு வழி வகைகளை உருவாக்காது சந்தர்ப்ப அரசியல் நடத்தி வருவது நகைப்புக்கு உரியது. சரியான அரசியல் வழிகாட்டியும் தலைமைத்துவமும் இன்மையால் இந்த முன்னாள் பெண் போராளிகள் அநாதரவா விடப்பட்டுள்ளனர்.தமிழ்அரசியலில் அதிகார வர்க்கம் சார்ந்த அரசியலே அன்று தொடங்கி இன்று வரை நடந்து வருகின்றமையே இதற்கு காரணம்.

பணியகங்களில் சேவையாற்றும் ஆணுக்கு ஊதியம் கிடைக்கின்றது. அவ்வாறு பணியாற்றுகின்ற ஆணுக்கு, சகல வசதிகளையும் செய்யும் பெண்கள், வீட்டிலிருந்து செய்யும் செயற்பாடுகளுக்கு பணரீதியான மதிப்புக்கள் கிடைப்பதில்லை. பல வீட்டுப் பணிகளை ஓய்வே இல்லாமல் செய்யும் இவ்வாறன பெண்கள் வடபகுதியில் அதிகமே. அவர்களே பெண் பிறப்பை வெறுக்கன்றனர்.

பொருளாதாரத்தில் பின்னிலையில் உள்ள குடும்பங்கள் தங்களின் பெண்பிள்ளைகளை வயது முதிர்ந் ஆடவர்களுக்குத் திருமணம் முடித்துவைத்தல், வெளிநாட்டு மோகத்தால் பதவுத்திருமணம் செய்து விட்டு நிண்ட நாட்கள் காத்திருத்தல், அங்கு சென்றவர்கள் ஏமாற்றம் அடைதல், வாழ்வை வெறுத்தல், பிணமாக திருப்பி அனுப்பப்படல் இவ்வாறாக, திருமணம் தடைப்படல், பொருந்தா திருமணம், ஒழுக்கப் பிறழ்வுகள், பாலியல் சுரண்டல், குடும்பப் பிரிவு, தனிமையில் துன்புறல் என நெருக்கடிகளை எதிர் கொண்டு தற்கொலைக்குச் செல்கின்றனர்.

முடிவுரை:-

'பெண்ணுக் குள்ளே ஞானத்தை வைத்தான் - புவி பேணி வளர்த்திடும் ஈசன்' - பாரதியாரின் மணி மொழி. அந்த வகையில் பெண்களின் ஞானத்தை அழிப்பதன் விளைவே இயற்கை அழிவும் தொற்று நோய்களும் மனித இனத்தை பிரம்மிக்கவைக்கின்றன. எனவே, வடக்கு மாகாணத்தில் மேலே காட்டியதைப்போல பெண்கள் எதிர்கொள்ளும் மன அழுத்தங்களும் உளவியல் முரண்பாடுகளும், பிரச்சினைகளும் சிரமங்களும் மிகுந்த நிலையில் ஏற்படும் உளவியல் நெருக்கடிகளும் ஏராளம். இடையிடையே அவற்றுக்கான சில தீர்வுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

மேலும் நல்லிணக்க ஆணைக்குழு பெண்கள் தொடர்பாக வைத்துள்ள திட்ங்களை செயற்படுத்துவதன் மூலம் உளவியல் முரண்பாடுகளை ஓரளவுக்குக் குறைக்கலாம். வடக்கு மாகாணத்தில் ஐ.நா. சிறுவர் கல்விக்கான நிதியம் பெண்கள் வலுவூட்டல் சட்டத்தில் உள்ளடங்கும் ஐந்து வலுவூட்டல் மட்டங்களான நலன் பேணல், அடைதல், விழிப்புணர்வைக்காட்டல், கட்டுப்பாடு, பங்குபற்றல் ஆகியவற்றை 2021 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்திலிருந்து பூரணமாக நடைமுறைப்படுத்தினால், கட்டாயம் பெண் விடுதலை - சுதந்திரம் - கிட்டும். இவ் மாகாணத்தில் பெண்களுக்குக் குடும்பத்திலும்பொது இடங்களிலும் வேறுபடுத்திக்காட்டும் சம்பிரதாய விதிமுறைகளையும் சமூக விதி முறைகளையும் நீக்குதல் வேண்டும்.



பெண்களின் பூரண சுதந்திரத்திற்கு பெண்கள் மத்தியில் தங்களைப் பற்றியுள்ள தவறான கருத்தியலில் இருந்து ஒவ்வொரு பெண்ணும் விடுபடுதல் வேண்டும். தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் வடக்கு மாகாணப் பெண்கள் எதிர் காலத்தில் அனைத்துத் துறைக-ளிலும் பிரகசிக்க வேண்டுமாயின் நீங்கள் யாரால், எப்படி? சுரண்டப்படுகின்றீர்கள் என்பதை உணர்ந்து உங்கள் விடுதலை - சுதந்திரம் - நோக்கிப் புறப்படுங்கள்.

முற்றும்

புயல் நேசன்




## பிரைவசி பொலிசி விவகாரத்தில் வட்ஸ்அப் பிடிவாதம்

வட்ஸ்அப் செயலியில் மேம்படுத்தப்பட்ட புது பிரைவசி பாலிசி விதிகளை ஏற்காதவர்களுக்கு புது கட்டுப்பாடு அமலாகிறது.

வட்ஸ்அப் நிறுவனம் தனது புதிய பிரைவசி பாலிசியை வாடிக்கையாளர்கள் ஏற்றுக் கொள்வதற்கு பிறப்பித்த மே 15 காலக்கெடுவை நீக்கிவிட்டது. இதனால், புது அப்டேட்டை இன்ஸ்டால் செய்யாதவர்கள் மே 15 ஆம் தேதிக்கு பின் தொடர்ந்து வட்ஸ்அப் செயலியை பயன்படுத்தலாம்.

எனினும், புது அப்டேட் இன்ஸ்டல் செய்யக் கோரி வட்ஸ்அப் சார்பில் அடிக்கடி நோட்டிபிகேஷன் அனுப்பப்படுவதாக பயனர்கள் தெரிவித்து வருகின்றனர். புது விதிகள் வட்ஸ்அப் அதன் பயனர் விவரங்களை பேஸ்புக் இயக்கும் வசதியை வழங்கும்.

புதிய அப்டேட்டை இன்ஸ்டால் செய்யாதவர்களுக்கு சில அம்சங்களை பயன்படுத்தும் வசதி படிப்படியாக நிறுத்தப்படும் என வட்ஸ்அப் தெரிவித்துள்ளது. அந்த வகையில் வட்ஸ்அப் சட் லிஸ்ட்-ஐ இயக்க முடியாது. மேலும் வட்ஸ்அப்பில் வரும் அழைப்புகளை ஏற்க முடியும்.

எனினும், நோட்டிபிகேஷன் அலெர்ட்களை க்ளிக் செய்த பின்பே குறுந்தகவல்களை படிக்க முடியும். சில வாரங்களுக்கு பின் பயனர்களுக்கு வரும் குறுந்தகவல்கள் நிறுத்தப்படும்.




## சூடுபிடிக்கும் செங்குத்து விவசாயம்




ஜெர்மனியில் புதிய பசுமைப் புரட்சி தொடங்கிவிட்டது. விவசாய நிலங்களில் அல்ல, நகரின் நடு மையத்தில், பயன்படுத்தப்படாத பழைய கட்டடங்களில், செங்குத்து வேளாண்மை முளைத்திருக்கிறது. 'இன்பார்ம்' என்ற முன்னணி செங்குத்து வேளாண் நிறுவனம், தற்போது ஜெர்மனி, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் செங்குத்து விவசாயத்தை பரப்பி வெற்றிகண்டு வருகிறது. பல டஜன் காய்கறி செடிகளை, ஒரு பெரிய சட்டகத்தில் வைக்கும் அமைப்புகளை இன்பார்ம் உருவாக்குகிறது.

இந்த சட்டகங்களை ஒன்றன் மேல் ஒன்றாக பல மீட்டர் உயரத்திற்கு அடுக்கினால், குறுகிய இடத்தில் பல காய்கறி செடிகளை வளர்க்கலாம்.மேலும், செடிகளுக்கு தேவையான நீர், உரம் போன்றவற்றை விரயமில்லாமல் வழங்க, பல்லாயிரம் உணரிகளும், குழாய்களும் பயன்படுத்தப்படுகின்றன. செடிகளுக்கு தேவையான ஒளியை எல்.இ.டி விளக்குகள் தருகின்றன. இந்த அமைப்புகளை செயற்கை நுண்ணறிவு மூலம் துல்லியமாக கட்டுப்படுத்தலாம். இதனால், நிலத்தில் விளைவதைவிட, இன்பார்மின் அடுக்கு அலமாரி விவசாய முறை, 400 மடங்கு அதிக உற்பத்தியையும், கணிசமான லாபத்தையும் தருவதாக அதன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நகரின் நடுவிலும், புறநகர்களிலும் இன்பார்மின் செங்குத்து விளைச்சல் முறையை பயன்படுத்தினால், நுகர்வோருக்கு பசுமையான காய்கறிகள் பறித்தவுடன் கிடைக்கும். மேலும், போக்குவரத்து செலவும் கணிசமாகக் குறையும். எனவே, விவசாயத்தின் எதிர்காலம் செங்குத்து வளர்ச்சி காணப் போகிறது.

## குளிருக்கும், வெப்பத்துக்கும் ஒரே ஆடை

ஒரே உடையால், அதை அணிபவருக்கு குளிர்ச்சியையும், கதகதப்பையும் வழங்க முடியுமா? சிறப்பாக உருவாக்கப்பட்ட நூலிழைகள் இருந்தால் அது முடியும் என்கிறது அறிவியல். சீனாவிலுள்ள சேஜியாங் பல்கலை மற்றும் வெஸ்ட் லேக் பல்கலை ஆகியவற்றைச் சேர்ந்த விஞ்ஞானிகள், செயற்கை இழைகளை கொண்டு, உள்ளும் புறமும் வெவ்வேறு துணை இழைகளைச் சேர்த்து நெய்ததால் இந்த அற்புதம் நிகழ்ந்து உள்ளது.



இந்த துணியால் தைக்கப்பட்ட உடையின் கதகதப்பான பகுதியை வெயில் படும்படி உடுத்தினால், வெளிப்புறத்தில் உள்ள துத்தநாகம் மற்றும் செம்பு நேனோ துகள்கள் சூரிய ஆற்றலை அப்படியே உறிஞ்சிக் கொள்வதோடு, உடலின் வெப்பத்தையும் கசியவிடாமல் தடுக்கிறது. இதனால், குளிர் தாக்காமல் உடல் கதகதப்பாகவே இருக்கும்.

இதே உடையை, உள்புறத்தை திருப்பி அணிந்தால் போதும். உடனே அந்த உடையின் பரப்பிலுள்ள பி.எம்.எம்.ஏ., என்ற பாலிமரால் ஆன இழைகள், சூரிய ஒளியையும் வெப்பத்தையும் பிரதிபலித்து வெளியேற்றுவதோடு, உடலின் வெப்பத்தையும் கசியவிடுகிறது. இதனால் உடலுக்கு குளிர்ச்சி ஏற்படுகிறது.இத்தகைய, 'இரு முக' உடை சந்தைக்கு வந்தால், 'ஏசி' ஸ்வெட்டர் போன்றவை இல்லாமலேயே நம்மால் வாழ முடியும் என்ற நிலை மீண்டும் வரக்கூடும்.

## அதியுயர் அடர்த்தியுள்ள சாதனை லேசர்

இயற்பியல் உலகில் புதிய மைல் கல் எட்டப்பட்டுள்ளது. உலகிலேயே அதியுயர் செறிவுள்ள லேசர் ஒளிக்கதிரை தென்கொரிய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

கடந்த பல ஆண்டுகளாக, இத்தகைய சக்திவாய்ந்த லேசர் கதிரை உருவாக்கிவிட, பல நாடுகளின் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வந்தனர்.இந்த நிலையில், தென் கொரியாவிலுள்ள லேசர் ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள் இதை முந்திக்கொண்டு நிகழ்த்திக் காட்டியுள்ளனர்.



இதற்கு முன்பு, அமெரிக்காவிலுள்ள மிசிகன் பல்கலையின் ஹெர்குலிஸ் லேசர் கருவியில்தான் அதியுயர் அடர்த்தியுள்ள லேசர் கதிராக வெளிப்பட்டது. இக்கருவி, சதுர சென்டிமீட்டருக்கு 1022 வாட் அளவுக்கு செறிவான லேசர் கற்றையை வெளிப்படுத்தியது. ஆனால்தற்போது,தென்கொரிய விஞ்ஞானிகள், சதுர சென்டிமீட்டருக்கு 1023 வாட் என்ற அளவில் சற்று அதிக அடர்த்தி லேசரை உருவாக்கி சாதனை படைத்துள்ளனர்.

இதை சாதிக்க, கொரியர்களுக்கு பத்து ஆண்டுகால ஆராய்ச்சிகள் தேவைப்பட்டுள்ளன.மேலும், சிக்கலான கண்ணாடிகள், ஒளி பெருக்கிகள், உணரிகள் போன்றவையும் தேவைப்பட்டுள்ளன. மனித தலைமுடியில் 50ல் ஒரு பங்கு அகலமே உள்ள லேசர் கற்றையை உருவாக்கவே இத்தனை பாடுகள்.

இருந்தாலும், விண் இயற்பியலில் எலக்ட்ரான்-போட்டான் சிதறல் முதல், புற்றுநோய் சிகிச்சை வரை பலவற்றுக்கு இத்தகைய சக்திவாய்ந்த லேசர்கள் உதவும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

**உயர் தொழில்நுட்ப துறைக்கு கூலிகளை தரும் நாடாக இல்லாமல், அறிவு வல்லரசாக இந்தியா மீண்டும் மாற, ஒரு புதிய மறுமலர்ச்சி தேவை.**

**ஏ.பி.ஜே.அப்துல் கலாம்,**
**முன்னாள் குடியரசு தலைவர்**



# சீனா வைரஸ்! உலகத்திற்கே ஆபத்து!

பொருளாதார ஏகாதிபத்தியம் : தனது பொருளாதார வலிமையைப் பயன்படுத்தி நாடுகளை அடிபணியச் செய்ய செய்யும் சீனாவின் திட்டம் இது தான்.

இரண்டாம் உலகப் போர் முடிந்தது முதல்.யாரும் கண்டிராத கடும் சிக்கலை வுஹான் கொரனா வைரஸ் உலகம் மீது கட்டவிழ்த்துட்டுள்ளது. உலப்பொருளாதாரம் நலிவடைந்து கிடக்கிறது. மக்கள் இன்னும் பெரிய அளவில் பல நாடுகளில் மரணமடைந்து கொண்டிருக்கிறார்கள். கொரானா வைரஸீடன் நாம் நெடுநாள் வாழ வேண்டியிருக்கும் என்ற உண்மையும் கொஞ்சம் கொஞ்சமாக புரிய ஆரம்பித்துள்ளது.

இந்த ஆபத்தை உலகம் முழுதும் ஒன்றிணைந்து போராடும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும். வாழ்க்கையின் சில அடிப்படை உண்மைகளை எல்லாரும் வெகு விரைவில் அறிந்து கொண்டார்கள். காரணம். இந்தப் பேரழிவின் மையத்தில் சீனா உள்ளது. கொரானா வைரஸின் தீவிரத்தைக் குறித்து உலகத்துக்கு எச்சரிக்கை கொடுக்காமல். WHO வில் தனக்குரிய செல்வாக்கை பயன்படுத்தி நாடுகளை அக்கறையில்லாமல் இருக்க செய்து விட்டு. இப்போது தன்னுடைய பொருளாதார அசுர பலத்தை பயன்படுத்தி உலகத்தை அடிபணிய வைக்கப் பார்க்கிறது சீனா.

உலகளாவிய அளவில் உற்பத்தித் தொழிற்சாலைகளின் மையமாக இருப்பதால் . அடுத்த நாடுகளின் மீது அதற்கு வலுவான பிடி உள்ளது. தான் நினைத்தால் அந்த நாடுகளின் பொருளாதாரத்தை முடக்க முடியம் என்றும் சீனாவுக்கு நன்றாகத் தெரியும். இதன் அடிப்படையில் தான் வுஹான் வைரஸ் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அழைத்த போது மருத்துவ விநியோகங்களை அமெரிக்காவிற்கு நிறுத்தி விடுவதாக சீனா மிரட்டியது. சீனா அப்படி நிஜமாகவே செய்திருந்தால் அமெரிக்கா கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும். அமெரிக்காவின் 95% anti biotics மருந்து சீனாவிலிருந்து வருகிறது. அமெரிக்க அதிபரும் வுஹான் வைரஸ் என்று அழைப்பதை வெகு விரைவில் நிறுத்தி விட்டார்.

இந்த வெற்றியின் மூலம் துணிவடைந்த சீனா மற்றவர்களையும் இப்போது மிரட்ட ஆரம்பித்திருக்கிறது. போன மாதம் நெதர்லாந்துக்கு மருத்துவ உதவிகளை நிறுத்தி விடுவித்தாக மிரட்டியது. தைவான .முகக்கவசங்களை நெதெர்லாந்துக்கு அனுப்பியதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக. தைவானிலிருக்கும் தங்கள் தூதரகத்துக்கு 'Nether lands office Taipei' என்று பெயர் மாற்றினர். தங்களுடைய 'ஒரே சீனா' கொள்கைக்கு இது பொருந்தாததால் சீனா கோபமடைந்தது .

இந்த வார தொடக்கத்தில். ஜப்பானிய கடலில் செங்காகு தீவுகளுக்கு அருகே சீன அரசாங்க கப்பல்கள் ஜப்பானிய மீன்பிடி படகுகளை துரத்தியது. இந்த



சம்பவம் தொடர்பாக டோக்கியோ தனது எதிர்ப்பை சீனாவுக்கு பதிவு செய்தது. மேலும். கொரோனா வைரஸ் தொற்றுநோயின் தோற்றம் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஆஸ்திரேலியா திரும்பப் பெற மறுத்ததைத் தொடர்ந்து ஆஸ்திரேலிய பார்லி மீது 80 சதவீத இறக்குமதி வரியை விதிக்க சீனா அச்சுறுத்தியதால் ஆஸ்திரேலியாவும் சீனாவின் கோபத்தை அனுபவிக்கக்கூடும்.

இவை அனைத்திற்கும் மேலாக. இரண்டு சீன ஊடகங்கள். கிர்கிஸ்தான் மற்றும் கஜகஸ்தான் ஆகியவை சீனாவின் ஒரு பகுதியாக இருந்தன என்றும் கஜகஸ்தானும்கூட "சீனாவுக்குத்திரும்ப ஆர்வமாக உள்ளன" என்றும் கூறியது. இந்த இரு நாடுகளும் சீனாவிடமிருந்து பெரும் நிதி முதலீடுகளைப் பெற்றுள்ளன. அவை கம்யூனிஸ்ட் ஆட்சியின் விரோதப் போக்குகளுக்கு குறிப்பாக பாதிக்கப்படக்கூடியவை.

சீனாவின் இந்த திட்டம் . நிச்சயமாக. அமெரிக்கா பின்பற்றும் திட்டத்தை விட வேறுபட்டதல்ல. பிற நாடுகளின் இறையாண்மையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதற்கும். உலகெங்கிலும் அதன் மேலாதிக்கத்தைப் பாதுகாப்பதற்கும். அதன் பெரிய பொருளாதார மற்றும் இராணுவ வலிமையின் ஆதரவோடு. 'சிவில் சமூக அமைப்புகள்' மற்றும் 'மனித உரிமை தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்' ஆகியவற்றின் விரிவான வலையமைப்பைப் பயன்படுத்தி அதே நோக்கங்களை அடைய முயல்கிறது

சீனா. உலகம் இந்த கம்யூனிச ஆட்சியின் கீழ் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஒரே வழி. உலக விநியோக சங்கிலியில் (Global Supply Chain) ல் சீனாவின் ஆதிக்கத்தைக் குறைப்பது தான். அதை அடைய பெரும் பிரச்சனைகளையும். போராட்டங்களையும் உலகம் சந்திக்க வேண்டியிருக்கும். சமீபத்தில் நடப்பதை வைத்துப் பார்த்தால்.மற்ற எல்லா நாடுகளையும் விட கொரானாவிற்கு பிறகு வலிமையான நாடாக சீனாவே உருவாகலாம். கொரானாவிற்குப் பிந்தைய உலகம் அமரிக்க மேலாதிக்கத்தை அடிப்டையாகக் கொண்டதாக இருக்காது என்பது தெளிவு.

அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தத்தில் இலங்கைக்கு அநீதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சீனா எமது வளங்களை மாத்திரம் அல்ல கிடைக்கும் வருமானத்தையும் அள்ளி செல்கின்றது. அரசாங்கம் ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு முன்னர் தேசிய பாதுகாப்பு மற்றும் நாட்டின் இறையாண்மை போன்ற விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தியிருக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் அவ்வாறு செய்யாது மக்கள் மத்தியில் போலியான பிரசாரங்களை செய்து வருகின்றது.

அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கான காணி மதப்பீடு மிகவும் அநீதியான வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பெறுமதி மிக்க காணிகள் ஆக குறைந்த விலைகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

சீனாவுடனான அம்பாந்தோட்டை துறைமுக திட்டத்தில் 80 வீத பங்குகள் சீனாவிற்கும் 20 வீதமான பங்குகள் இலங்கைக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை நிராகரிக்கும் வகையில் அரசாங்கம். 60 வீதமான பங்குகள் சீனாவிற்கும் 40 வீதமான பங்குகள் இலங்கைக்கும் என போலியான பிரசாரங்களை செய்து வருகின்றது. சீனாவுடனான ஒப்பந்த வரைபை இதுவரையில் அரசாங்கம் வெளியிடாதது ஏன் ? என்ற கேள்வி அனைத்து மக்களுக்கும் உண்டு.

அப்பாந்தோட்டை துறைமுகத்தின் மூன்றாம் கட்டம் 2ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலர்களாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் ஏற்கனவே ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாடுகளுக்கு அமைவாக 80 வீதமம் சீனாவிற்கும் 20 வீதம் இலங்கைக்கு எனும் போது. மூன்றாம் கட்ட பணிகளுக்கான 20 வீதத்தை அதாவது 400மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கை வழங்க வேண்டியதுள்ளது. இந்த தொகையை செலுத்தா விட்டால் சீனாவின் 80 வீதமான பங்குகளில் அதிகரிப்பு நிலை ஏற்படும்.

ஒப்பந்தத்தில் காணப்படும் இந்த உண்மைகளை நல்லாட்சி அரசாங்கம் மக்களுக்கு கூற வில்லை . மாறாக 10 வருடத்தில் 50 வீதமான பங்குகள் இலங்கைக்கு கிடைக்கும் என கூறி வருகின்றது. மேலும் அம்பாந்தோட்டை துறைமுக திட்டம் முழுமையடைந்து 6 மாதங்களின் பின்னர் சீனா சர்வதேச மதிப்பீட்டின் அடிப்படையிலேயே இலங்கையுடன் இலாப நட்டத்தை பகிரப்போகின்றது.

ஆனால் தற்போது முன்னெடுக்கப்பட்ட அனைத்து மதிப்பீடுகளும் உள்ளக அளவுக்கோள்களை கொண்டே மேற்கொள்ளப்பட்டுள்ளன. சர்வதேச முதலீடுகளுக்காக ஒப்பந்தங்கள் மேற்கொள்ளும் போது விஞ்ஞான ரீதியில் கவனத்தில் கொள்வது மிகவும் அவசியமானதாகும். 100 கிலோ மீற்றர் பரப்பிற்குள் வேறு துறைமுகசார் நடவடிக்கைகள் இடம்பெற கூடாது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்பு சீனா வசமே காணப்படும் போன்ற விடயங்களை அரசாங்கம் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும். தேசிய பாதுகாப்பிற்கு இது சவாலான விடயமாவே காணப்படும். அது மாத்திரமின்றி தென்னிந்திய கடலில் இலங்கைக்கு காணப்படும் சிறப்பின் அதிகாரம் சீனாவின் வசம் செல்லும் நிலையே அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளது என குறிப்பிட்டார்.

மறவன்




## பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக அமெரிக்காவில் ஆயிரக்கணக்கானோர் போராட்டம்

காசா பகுதியில் இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவரக் கோரி ஆயிரக்கணக்கான பாலஸ்தீன சார்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்காவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். லொஸ் ஏஞ்சல்ஸ், நியூயோர்க், பாஸ்டன், பிலடெல்பியா மற்றும் அமெரிக்கா முழுவதும் உள்ள பிற நகரங்களின் வீதிகளில் பலர் திரண்டதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

சுதந்திர பாலஸ்தீனம் என்ற பதாகையுடன் லொஸ் ஏஞ்சல்ஸ், நியூயோர்க் நகரில் ஆயிரக்கணக்கானவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பாலஸ்தீனியர் ஒருவரின் வாழ்க்கை ஒரு இஸ்ரேலியர் ஒருவரின் வாழ்க்கைக்கு சமமாக இருக்க வேண்டும் என தான் விரும்புவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். மேலும் தாக்குதலை மேற்கொள்ளும் இஸ்ரேலுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நிறுத்த வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.




## ஈரான் ஜனாதிபதி தேர்தல் போட்டியில் ரைசி மற்றும் லரிஜானி !!

ஈரானின் நீதித்துறை தலைவர் இப்ராஹிம் ரைசி மற்றும் முன்னாள் நாடாளுமன்ற சபா நாயகர் அலி லரிஜானி ஆகியோர் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கவுள்ளனர். உச்ச தலைவரான அயதுல்லா அலி கமேனியுடன் நெருங்கிய உறவு கொண்ட இவர்கள் இருவருடன் ஜனாதிபதி தேர்தலில் 300 க்கும் மேற்பட்டவர்கள் போட்டியிட அனுமதி கோரியுள்ளனர்.



இந்நிலையில் 300 மேற்பட்ட வேட்பாளர்கள் குறித்து 12 இறையியலாளர்கள் மற்றும் நீதிபதிகள் கொண்ட சபை இறுதி முடிவை அறிவிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கடந்த 2017 தேர்தலுக்கு அனுமதி கோரிய 1,600 க்கும் மேற்பட்ட வேட்பாளர்களில் 6 பேருக்கு மட்டுமே ஒப்புதல் அளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. 1988 இல் பல ஆயிரம் அரசியல் கைதிகளை படுகொலை செய்ததில் 60 வயதான ரைசிக்கு பங்கு இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்தோடு தற்போது அயதுல்லா கமேனியின் ஆலோசகராக பணியாற்றும் 63 வயதான பழமைவாத முன்னாள் அணுசக்தி பேச்சுவார்த்தையாளரான அலி லரிஜானி செயற்பட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை தற்போதைய ஜனாதிபதி ஹசன் ரௌஹானிக்கு தொடர்ந்து மூன்றாவது முறையாக போட்டியிட அனுமதி வழங்கப்படவில்லை. 2017 முதல் ஈரானில் நாட்டின் பொருளாதாரத்தின் நிலை பெரும் அதிருப்திகுள்ளாகிய நிலையில் 2018 ல் மீண்டும் அமுல்படுத்தப்பட்ட அமெரிக்க பொருளாதாரத் தடைகளால் முடங்கியமை குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்தில் கட்டுப்பாடுகள் தளர்வு - நிபுணர்கள் எச்சரிக்கை

இந்தியாவில் முதன்முதலில் அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸ் மாறுபாடு குறித்த கவலைகள் அதிகரித்துள்ள நிலையில் திங்கட்கிழமை முதல் இங்கிலாந்தில் கட்டுப்பாடுகளை தளர்த்துவது குறித்து பல நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். கட்டுப்பாடுகளில் தளர்வு என்ற அறிவிப்பு நான்கு நாட்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும், ஏப்ரல் 23 அன்று அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட ஹோட்டலில் தனிமைப்படுத்தல் அவசியம் என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை நாட்டுக்கு அனுமதிக்கும் சிவப்பு பட்டியலில் இந்தியாவை சேர்க்கும் நேரம் இது என்றும் பிரதமர் பொரிஸ் ஜோன்சனுக்கு கடுமையான விமர்சனங்களை அவர்கள் முன்வைத்துள்ளனர்.

குறிப்பாக நாளை முதல் வீடுகள், பப்கள் மற்றும் உணவகங்களில் ஒன்றுகூடலுக்கு அனு மதி வழங்கப்படவுள்ள நிலையில் ஜூன் 21 அன்று மீதமுள்ள அனைத்து கட்டுப்பாடுகளையும் தளர்த்தும் முடிவினை மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். அன்று சனிக்கிழமையன்று, இங்கிலாந்தில் இந்திய மாறுபாட்டின் புதிய மாறுபாடு உடைய 1,313 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டதாகவும் இது கடந்த வாரத்தை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகம் என்றும் பொது சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது. ஏற்கனவே இது சில மாதங்களாக இங்கிலாந்தில் ஆதிக்கம் செலுத்தும் **B.1.617** மாறுபாட்டை விட இந்த மாறுபாடு 50% அதிகமாக பரவக்கூடியதாக கருதப்படுகிறது.

## சர்வதேசத்தின் கோரிக்கை: இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவை அவசரமாக கூடுகின்றது!!

பாலஸ்தீனிய போராளிக்குழுவான ஹமாஸீடன் போர் நிறுத்தத்திற்கான சர்வதேசத்தின் கோரிக்கைக்கு மத்தியில், இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவை அதன் அடுத்த நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க உள்ளது.

இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவை குழுவிற்கு இராணுவ நடவடிக்கை குறித்து முடிவுகளை எடுக்கும் அதிகாரம் காணப்படுகின்றது.

விரோதப் போக்கை விரைவாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என சில உறுப்பினர்கள் கருத்து தெரிவித்து வருவதாக இஸ்ரேலிய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சியான வன்முறைகள் இஸ்ரேலை ஒரு பரந்த மோதலுக்கு இட்டுசெல்லும் என்றும் இதன் காரணமாக உயிரிழப்புகள் மற்றும் தரைவழி தாக்குதலுக்கான ஆபத்து உள்ளது என்றும் பாதுகாப்பு அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.



## இஸ்ரேலின் தாக்குதலில் 41 குழந்தைகள் உட்பட 145 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளதாக அறிவிப்பு!

பாலஸ்தீனத்தின் காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 145 ஆக உயர்ந்துள்ளது. உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி கடந்த 6 நாட்களாக இஸ்ரேல் தாக்குதலில் ஈடுபட்டுள்ளது. இந்தத் தாக்குதல் தேவையானவரை தொடரும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், நடத்தப்பட்ட குண்டு வீச்சில் அசோசியேட்டட் பிரஸ் மற்றும் அல் ஜஸீரா உள்ளிட்ட ஊடகங்களின் கட்டடங்கள் தரைமட்டமாகின. மக்கள் வெளியேறுவதற்கு ஒரு மணிநேரம் அவகாசம் கொடுத்த பின்னர், வான்வழித் தாக்குதலை மேற்கொண்ட இஸ்ரேல் இராணுவம், குறித்த கட்டடக் கோபுரத்தை முற்றாக அழித்துள்ளது. காஸா பகுதியைத் தொடர்ந்து மேற்குக் கரை பகுதியிலும் இஸ்ரேல் கடும் வான்வழித் தாக்குதலில் ஈடுபட்டுள்ளது.

இதனையடுத்து, இதுவரையில், நடத்தப்பட்ட குண்டு வீச்சில் 41 குழந்தைகள் உட்பட 145 பேர் உயிரிழந்துள்ளனர் என பாலஸ்தீனர்கள் தெரிவித்துள்ளனர் என சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன. இந்த நிலையில், பதற்றத்தைத் தணிக்க உலக நாடுகள் முயற்சித்து வருகின்றன. அந்த வகையில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் பாலஸ்தீன ஜனாதிபதி முஹமது அப்பாஸ் உடன் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன தலைவர்களை தொலைபேசியில் தொடர்புகொண்ட ஜோ பைடன் இருதரப்பும் அமைதியை கடைபிடிக்குமாறு கூறினார். காசா முனை பகுதியில் அசோசியேட் பிரஸ், அல் ஜசீரா போன்ற சர்வதேச ஊடகங்களின் அலுவலகங்கள் அமைந்திருந்த கட்டிடத்தை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கு பின்னர் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. இதேவேளை, அமெரிக்கா இஸ்ரேலிடம் "ஊடகவியலாளர்கள் மற்றும் சுயாதீன ஊடகங்களின் பாதுகாப்பைஉறுதி செய்வது மிக முக்கியமான பொறுப்பு" என வெள்ளை மாளிகையின் ஊடக செயலாளர் ஜென் சாகி கூறியுள்ளார்.



# COVID-19 தடுப்பு முறைகள்



நீங்கள் இருக்கும்போது எப்போதும் சுத்தமான முகமூடியை அணியுங்கள் வீட்டை



கைகளை அடிக்கடி கழுவிக்கொள்ளவும்



இருமல் மற்றும் தும்மலின் போது முழங்கையின் உற்பகுதியினால் மூடிக் கொள்ளவும்



இருமல் மற்றும் தும்மலின் போது திசு கடதாசியினால் மூடிக் கொள்ளுவதுடன் அதனை சரியாக அப்புறப்படுத்தவும்



கைகுலுக்குவதையும் அல்லது உங்கள் நண்பர்களையும் உறவினர்களையும் கட்டிப்பிடிப்பதையும் தவிர்க்கவும்.



நெரிசலான இடங்களைத் தவிர்க்கவும்




பொது இடங்களில் அல்லது நீங்கள் யாருடனாவது பேசும்போதும், உங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் குறைந்தபட்சம் ஒரு மீட்டர்

## COVID-19 யைத் தடுக்க சந்தைகளில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

நீங்கள் வரிசையில் நிற்கும்போது உங்களுக்கும் பிற வாடிக்கையாளர்களுக்கும் இடையில் குறைந்தபட்சம் ஒரு மீட்டர் தூரத்தையேனும் பராமரிக்கவும்.

கடைக்குள் நுழைவதற்கு முன்பு கைகளை சவர்க்காரம் அல்லது கை சுத்திகரிப்பான் பயன்படுத்தி கைகளை நன்றாக கழுவுதல் வேண்டும். கைகளை கழுவினால் வைரஸ் பரவுவதை வெற்றிகரமாக குறைக்க முடியும் என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

எந்த காரணமும் இல்லாமல் மூக்கு மற்றும் கண்களைத் தொடுவதைத் தவிர்க்கவும். இவ்வாறு செய்வதன் மூலம் வைரஸ் பரவக்கூடும்.



உங்களுக்கு காய்ச்சல், சளி, இருமல் போன்ற அறிகுறிகள் இருப்பின், தயவுசெய்து கடைகளுக்குச் செல்ல வேண்டாம்.

உங்களுக்குத் தேவையானப் பொருட்களை மட்டும் வாங்கவும். இது உங்கள் தேசிய பொறுப்பாகும்.

கடைகளில் வரிசையில் நிற்கும்போது வயதானவர்களுக்கு முன்னுரிமை கொடுங்கள். அவர்கள் மற்றவர்களை விட COVID -19 வைரஸால் மிக வேகமாக பாதிப்படையைக் கூடியவர்கள்

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 16.05.2021 அன்று வெளியிடப்பட்டது.